₹10

fmpb

அறைகூவல்

Volume 52 Issue 8 August 2022

... நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.

(கலாத்தியர் 5:13)



ஆரம்ப வரிகள்...

சுதந்திர வாழ்விற்கு ஓர் அழைப்பு!



இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து மற்றும் பிற நாடுகளிலும் அடிமைகளாக இருந்ததை வேதாகமம் நமக்குத் தெளிவாக விளக்குகிறது. இப்படிப்பட்ட அடிமைத்தனம் இந்நாட்களில் நவீன மயமாக்கப்பட்டு, திரள்கோடி மக்கள் இந்த நவீன அடிமைத்தனத்தைக் 'கட்டாய உழைப்பு' என்ற பெயரில் வீட்டு வேலைகளிலும், கட்டிடத் தொழில்களிலும், விவசாயத்திலும், சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும், செங்கல் சூளைகளிலும், ஏற்றுமதி நிறுவனங்களிலும் மற்றும் விபச்சாரவிடுதிகளிலும் சட்டத்துக்குப் புறம்பாக 38-46 மில்லியன் மக்கள் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். 76-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிற நாம், மேலே கொடுக்கப்பட்ட பட்டியலில் பொருந்தும் அநேக மக்களை நம்மோடு சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க ஏங்கும் பலரை சந்தித்திருப்போம். இவர்களுக்கு இந்த சுதந்திரம் எப்பொழுது கிடைக்கும்?

'பாவ அடிமைத்தனம்' என்பது இப்படிப்பட்ட உலகப் பிரகாரமான அடிமைத்தனத்திலும் மிகவும் கொடியதானது என்பதைப் பலரும் இன்னும் உணரவில்லை. பரிசுத்த வேதாகமம், இந்த பாவ அடிமைத்தனத்தைக் குறிப்பிடும்பொழுது, பாவம் செய்பவர்கள் அவர்களின் எஜமானாகிய சாத்தானின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்பட்டு இருக்கிறார்கள் என 1யோ.5:19-ல் வாசிக்கிறோம். இந்த உலகில் பிசாசானவன் மனிதனைப் பயம், கோபம், பொறாமை, பெருமை, கசப்புணர்வு, குற்ற உணர்வு போன்றவற்றினால் அடிமையாக்கி வைத்திருக்கிறான். ஆனால், நமது இரட்சகராம் இயேசுகிறிஸ்து தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்துக் கொடுத்த இந்த முழுமையான சுதந்திரத்தை (கலா.3:13) நாம் எப்பொழுதும் நமது கண்களுக்கு முன்பாக நிறுத்த கடமைப்பட்டுள்ளோம். இச்சுதந்திரத்தை நாம் அறிந்து கொள்ளவோ அல்லது அனுபவிக்கவோ, தேவ ஆவிக்குரிய சட்ட திட்டமாகிய அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளும்பொழுது மட்டுமே, அது நமக்குக் கிடைக்கும் என யோ.8:31,32-ல் வாசிக்கிறோம். தேவன் நம்மைப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க, முதலாவது நம்மை "வாருங்கள்!" என்றழைத்து, நமது பாவ விலங்கை ஒடித்து, அதன்பின் பிறரின் பாவ அடிமைத்தனத்தின் விலங்கையும் உடைத்தெறியவும் ஒரு விடுதலை நாயகன் இருக்கிறார் என்ற நற்செய்தியை அவர்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்க "போங்கள்!" என்று பணிக்கிறார். இதுவே, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் இறுதிக்கட்டளை ஆகும்.

அவ்வாறு "போங்கள்!" என்ற தேவ சத்தம் கேட்ட ஒரு கூட்ட மொராவியன் மிஷனெரிக்குழுவினர், ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள 100 தீவுகளில் அடிமைகளாக வாழ்ந்து வந்த மக்களை மீட்டு, இயேசுவின் அன்பை அவர்களுக்குக் கூறிட தங்கள் வாழ்வையே அடிமைகளாக அர்ப்பணித்தனர். அத்தீவுகளுக்கு போக விசாவோ பாஸ்போர்ட்டோ தேவையில்லை; நாம் அடிமைகளாக இருந்தால் மட்டும் போதுமானது. அவ்வாறு அவர்கள் அடிமைகளாகச் செல்வதற்கு அவர்களது காதுகள் கிழிக்கப்படுவதோடு, சாட்டைகளினால் குறைந்தது 12 முறையாவது அடிக்கப்பட்ட தழும்புகளும் அவர்கள்மீது இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், அங்கு வேதாகமத்தைக் கையில் ஏந்திச் செல்ல முடியாத நிலை இருந்ததால், முழு வேதாகமத்தையும் மனனம் செய்து அதன் மூலம் சத்தியத்தை அறிவித்திடும் நடமாடும் வேதாகம நிருபங்களாக அவர்கள் அந்த தீவுக்குள் மிகுந்த வைராக்கியத்தோடு புறப்பட்டுச் சென்று, அடிமை வாழ்வில் இருந்த அவ்வினமக்களில் அநேகரை மீட்டெடுத்தனர். இம்மீட்புப்பணியில் நமது பங்கு என்ன? ஊழியர் பில்லிகிரஹாம் கூறுவதுபோல, "நம் தேசங்கள் தங்கள் சொந்த கால்களால் மீண்டும் சீராக நிற்பதற்கு, நாம் முதலாவது நமது முழங்கால்களில் நிற்க வேண்டும்." ஆம்! வாருங்கள், நமது தேவன் அருளும் முழுமை சுதந்திரத்தை நம் தேசத்தாரும் பெற்றிட ஜெபிப்போம், செயல்படுவோம், தேசத்தைச் சுதந்தரிப்போம்!

- மெர்சி செல்வின் *(தகவல் தொடர்புத்துறை)*

சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். (1 பேதுரு 2:16)

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன் சுதந்திரத்தைப் பாதுகாக்க, தேவனின் மெய்யான ஒளியை அனுபவிக்க வேண்டும். - வாட்ச்மேன் நீ

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். (ரோமர் 6:22)

ஆவிக்குரிய சுதந்திரம் - பறிக்க முடியாதது; அது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் நோக்கமுள்ளதாகவும் மாற்றுகிறது. - விக்டர் E. ஃபிராங்கிள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பு,

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

தனிப்பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

பொதுச்செயலாளரிடமிருந்து...



சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத இந்தியர்களைச் சந்திக்கும் பணியில், எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

இயேசுகிறிஸ்துவின் சர்வ வல்லமையுள்ள நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த தலையங்கத்தை ஜார்க்கண்டிலிருந்து எழுதுகிறேன். அசீரியர்களிடமிருந்து தேசம் பாபிலோனியப் பேரரசுக்கு மாறிய காலக்கட்டத்தில் ஆபகூக் தீர்க்கதரிசி தேவனுடன் உரையாடலில் ஈடுபட்டார். அவர் தொடர்ந்து சில புகார்களை தேவனிடம் கூறியபோது, தேவனிடமிருந்து அவருக்குப் பதில்களும் கிடைத்தன. ஆபகூக்கின் புலம்பலுக்குப் பதில்கள் கிடைத்தவுடன், அவர் தேவன்மீதுள்ள தனது விசுவாச அறிக்கையைப் பாடலாகப் பதிவுசெய்து தனது புத்தகத்தை முடிப்பதைப் பார்க்கிறோம்.

ஆபகூக் தனது புத்தகத்தை முடிக்கும்போது, அதன் 3-ம் அதிகாரம் 17 முதல் 19 வசனங்களில் அவர் தனக்கு எந்த உணவுகளும் கிடைக்காவிட்டாலும், தான் தேவனை நம்புவதாகக் கூறுகிறார். ஒரு மனிதனுக்கு தேவையான எல்லாவற்றிலும் முதன்மையானது, உணவு. ஏனென்றால், உணவு இல்லாமல் யாரும் நீண்டகாலம் வாழ முடியாது. அத்திப்பழம், திராட்சைப்பழம், ஒலிவ எண்ணெய், வயலின் மகசூல், ஆட்டு மந்தைகள் மற்றும் தொழுவத்தின் மாடுகள் என்று மேற்கூறிய எதுவும் இல்லாவிட்டாலும், ஆபகூக் தேவனை நம்புவதாகவும், மகிழ்ச்சியாய் இருப்பதாகவும், தான் தனது இரட்சகராகிய தேவனுக்குள் களிகூருவேன் என்றும் பாடுகிறார். இந்த நம்பிக்கை அவருக்கு எங்கிருந்து வருகிறது? வாழ்வின் அத்தனை வளங்களும் இல்லாமற் போனாலும், தேவனே அவரது பலமாக இருப்பதால், அவருக்கு இந்த நம்பிக்கை வருகிறது. நம் வாழ்விலும் சில அடிப்படைத் தேவைகள்கூட நமக்கு இல்லாவிட்டாலும், சகலத்தையும் ஆளுகிற தேவனே நமது பலமாக இருந்தால், நாமும் நமது இரட்சகருக்குள் மகிழ்ந்து, களிகூருவோம்.

டிவிஷனல் செயலர்களோடு 2 நாட்கள் உபவாச ஜெபம்:

கடந்த 2022 ஜூன் 16 & 17-ம் தேதிகளில் டிவிஷனல் செயலர்களோடு 2 நாட்கள் உபவாச ஜெபத்தில் பங்குப்பெற்றேன். இப்படிப்பட்ட குழுக்கூட்ட ஜெபம் அனைத்து தரப்பு செயலர்களோடும் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு செயலாளரும் தனது குழுவினருடன் 3 மாதத்திற்கு ஒருமுறை உபவாச ஜெபம் செய்து வருகிறார்கள்.

சிறப்புப்பிரிவு (Wings) ஊழியச் செயலாளர்களுடன் சந்திப்பு:

ஜூன் 20-ம் தேதி, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி செயலாளர்களுடன் இணைந்து, வாலிபர், ஸ்கேன், பெண்கள் மற்றும் ஜெபப்பிரிவுகளின் பொறுப்பாளர்களுடன் ஒரு கூடுகை நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, சிறப்புப்பிரிவுகளின் ஊழியங்களை மறுஆய்வு செய்து, எதிர்கால ஊழியங்களைக் குறித்தும் திட்டமிட்டோம்.

கோயம்புத்தூர் கூட்டங்கள்:

ஜூன் 24 மற்றும் 25-ம் தேதிகளில், கோயம்புத்தூரிலுள்ள நமது ஊழியத்தின் விரிவுப்பணி பொறுப்பாளர்களைச் சந்தித்து, அவர்களின் அர்ப்பணிப்புள்ள ஊழியங்களுக்காக அவர்களுக்கு நன்றித் தெரிவிக்கவும், நமது தொலைநோக்கு அடிப்படையிலான சில திட்டங்களைப் பற்றி அவர்களுடன் கலந்துரையாடவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நமது தேசத்தின் மீட்பிற்காக திறப்பின் வாசலில் நிற்கும் அநேக ஜெபவீரர்களையும் சந்தித்தேன். குறிப்பாக, நமது ஊழியத்திற்காக பல ஜெபக்குழுத்தலைவர்களை உருவாக்கி வரும் ஓய்வுப்பெற்ற நமது மிஷனெரி சகோதரி ஒருவரைச் சந்தித்தது, எனக்குப் பெரும் ஊக்கமாக அமைந்தது.

வால்பாறை கூட்டங்கள்:

ஜூன் 26-ம் தேதி வால்பாறை பேராலய ஞாயிறு ஆராதனையில் தேவ செய்தி கொடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது; அங்கு நமது மிஷனெரிகள் 2 பேரும் வேறு இரண்டு தேவாலயங்களில் பிரசங்கித்தார்கள். அதைத் தொடர்ந்து வால்பாறை பழைய திருச்சபையில் வைத்து நடைபெற்ற வால்பாறை தலைவர்களின் கூட்டத்தில் பங்கேற்றேன். நமது ஊழியத்திற்கு அங்குள்ள திருச்சபை குருவானவர்கள் தங்களது பேராதரவை நல்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

குளச்சல் கூட்டங்கள்:

ஜூலை 2-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் சி.எஸ்.ஐ. தேவாலயத்தில் வைத்து ஒருநாள் கூடுகை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. போதகர்கள், திருச்சபைக் கமிட்டி அங்கத்தினர்கள் மற்றும் அங்குள்ள நமது FMPB தலைவர்கள் இக்கூடுகையை மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். பெரியவர்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கென தனித்தனி கூட்டங்களும் அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

தமிழ்நாடு மாநில முகாம் - 2022 சீராய்வு கூடுகை:

ஜூலை 3-ம் தேதி, தமிழ்நாடு வருடாந்திர மாநில முகாமில் தேவன் அற்புதமாக தமது ஆசீர்வாதங்களைப் பொழிந்ததற்காகவும், அம்முகாமின் கூட்டங்களைச் சீராய்வு செய்வதற்காகவும் பெத்தேல் - டேனிஷ்பேட்டை வளாகத்தில் நாங்கள் கூடினோம். முகாம் கமிட்டியின் ஒவ்வொரு பொறுப்பாளர்களும் அம்முகாமில் தேவன் செய்த மகத்துவமான வழிநடத்துதல்களை விளக்கிக் கூறியபோது, எங்கள் இதயங்கள் மகிழ்ச்சியாலும், நன்றியாலும் நிறைந்தன. மெய்யாகவே மாநில முகாமின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் தேவனுடைய அதிசயமான கிரியைகள் என்பதை உணர்ந்தோம். தேவனுக்கே மகிமை!

இயக்கத்தின் சொத்து பரிபாலன துறையுடன் சந்திப்பு:

ஜூலை 8-ம் தேதி, நமது இயக்கத்தின் சொத்து பரிபாலன துறையின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயலரோடு, வருங்கால ஊழியங்களைக் குறித்து திட்டமிடுவதற்காகச் சந்தித்தேன். இந்த குழுவில் பொறியாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் நமது நாடு முழுவதுமுள்ள நமது ஊழியம் சம்பந்தமான கட்டுமானப் பணிகளைக் கவனித்து வருவதால், இவர்களுக்கு தங்களின் ஜெபங்கள் அவசியம் தேவை.

திருச்சி மிஷன் கொண்டாட்டம்:

சி.எஸ்.ஐ. திருச்சி - தஞ்சாவூர் பேராயம் ஒரு மிஷன் கொண்டாட்டத்தை அம்மறை மாவட்டத்தின் பேராயர் தலைமையில் ஒழுங்கு செய்திருந்தது; அதில் தேவவார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நமது நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நற்செய்தியை எடுத்துச் செல்வதற்காக மிகவும் பாரத்துடன் செயல்படும் அத்திருமண்டலத்தின் பேராயர் மற்றும் அனைத்து திருச்சபைப் பொறுப்பாளர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

என்.இ.எல்.சி. மாடரேட்டருடனான சந்திப்பு:

நமது இயக்கத்தின் பணித்தள பொறுப்பாளர்களுடன், என்.இ.எல்.சி. திருச்சபைகளின் புதிய மாடரேட்டரையும், சினாடின் தலைவர் மற்றும் அதன் செயலாளரையும் கடந்த ஜூலை 15-ம் தேதி சந்தித்தேன். நாம் இயக்கமாக என்.இ.எல்.சி. திருச்சபைகளோடு கொண்டுள்ள கூட்டாண்மை உறவின் 33-வது ஆண்டாக இக்கூடுகை அமைந்தது. புதிதாக நியமிக்கப்பட்ட இத்திருச் சபைகளின் தலைவர்களுடன் நமது ஊழிய புதிய பொறுப்பாளர்களை அறிமுகப்படுத்த, இந்த சந்திப்பு பெரிதும் உதவியது.

ஏ.பி.ஏ. (ABA) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்:

அருணாச்சலப் பிரதேசத்தின் அபதானி பாப்திஸ்து சபை கூட்டாண்மையோடு உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பித்தல் நிமித்தமாக உள்ள கூடுகை, இந்த ஆகஸ்ட் 8-ம் தேதி அம்மாநிலத்திலுள்ள ஜிரோ பள்ளத்தாக்கில் வைத்து நடைபெற உள்ளது.

வடகிழக்கு மண்டல ஊழியர் கூடுகை:

வடகிழக்கு மண்டல மிஷனெரிகளின் ஆவிக்குரிய குடும்பக்கூடுகை ஆகஸ்ட் 9 முதல் 11-ம் தேதி வரை அசோமில் உள்ள நாகர்லகுனில் வைத்து நடைபெற இருக்கிறது. இக்கூடுகையில் கலந்து கொள்ள இருக்கிற மிஷனெரிக் குடும்பங்களின் பிரயாணங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



அருட்திரு. S. ஜாண் பெர்லின்

தேவனுடைய சுதந்திர தினம்!



"நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன்." (சங்.119:45)

நமது இந்திய தேசத்தில் சுதந்திர தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15-ம் தேதி மிகவும் முக்கிய நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
இந்நாள்..., நாம் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டு, சுதந்திரக்காற்றைச் சுவாசித்த நாள்.
இச்சுதந்திரத்தின் மூலம் அரசியல் சுதந்திரம், மத சுதந்திரம், பத்திரிக்கை சுதந்திரம், பேச்சு சுதந்திரம்,
நமது தேசத்தின் ஜனநாயக செயல்பாட்டில் பங்கேற்கும் சுதந்திரம் மற்றும்
பல்வேறு சுதந்திர பலன்களைப் பெற்று அனுபவிக்கும் வாய்ப்பையும்
நல்கிய தேவனைத் துதிப்போம்.
நமது சுதந்திர தின கொண்டாட்டம் – நமது நாட்டின்
இறையாண்மையைப் போற்றுவதாக இருந்தாலும்,
இதிலும்... நமது இயேசுவே மிகவும் போற்றப்படத்தக்கவர்! ஏனெனில்,
இயேசுகிறிஸ்துவின் 'மலைப்பிரசங்கமே'– மகாத்மா காந்தியின் சத்யாகிரகப் போராட்டத்திற்கு வழிவகுத்து, இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கச் செய்தது!

இச்சுதந்திர நாளில் –
இந்திய திருநாட்டில் நாம் வாழ்வதை நமக்கு பாக்கியமாகக் கருதினாலும்,
இதிலும்...
கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டு இங்கு வாழ்வதே மிகவும் பாக்கியம்!
இச்சுதந்திர நாளில் –
சுதந்திரப் போராட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து நாம் வியந்தாலும்,
கிறிஸ்து நமக்கு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் ஈந்த
ஆவிக்குரிய மெய்யான சுதந்திரம் விந்தையிலும் விந்தையே!
இதன் அடிப்படையில்...,
விசுவாசிகளாக நாம் தேசபக்திப்பாடல்களை முழுமனதோடு பாடினாலும்,
அது...
தேவனுக்கு நாம் ஆராதனை செய்வதை எவ்விதத்திலும் பாதிக்காது.
நமது சுதந்திர தின கொண்டாட்டம், தேவன்மீதுள்ள நமது அர்ப்பணிப்பை எள்ளளவும் குறைக்காது.
இதன் மூலம்...,
நமது இந்திய தேசம் பிறந்ததற்கான மகிழ்ச்சியை நாம் யதார்த்தமாக வெளிப்படுத்துகிறோம் – அவ்வளவுதான்!

வேதாகமத்தில் சுதந்திர தினம்:

வேதாகமக் கண்ணோட்டத்தில்,
தேவனுடைய வழிநடத்துதலுக்கேற்ப இஸ்ரவேலர்கள்...
எகிப்தை விட்டு வெளியேறி,
சுதந்திரம் அடைந்தனர் (யாத்.12).
இச்சுதந்திரம்...,
தேவன் எகிப்திற்கு வாதைகளை அனுப்பி,
அதனால் அங்கு பல அழிவுகள் ஏற்பட்டதின் பின்னணியத்தில் கிடைத்ததாகும் (யாத்.7-11).

இதிலிருந்து...
நாம் அறிந்துக்கொள்வது என்னவென்றால்,
சுதந்திரம் பெற இஸ்ரவேலர்கள்
போராடவில்லை,
மாறாக...
தேவனே அவர்களின் சுதந்திரத்திற்காகப்
போராடினார் என்பதே நிதர்சனம்!

இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு
செங்கடலைக் கடந்தபோது,
அவர்கள் உண்மையிலேயே
ஒரு சுதந்திர தேச ஜனங்களாகக்
காணப்பட்டனர்.
தேவனை அவர்கள் தங்களது
ராஜாவாகவும், மோசேயை அவர்களின்
சுதந்திர தேசத்திற்கான
பிரதிநிதியாகவும் கண்டார்கள்.
தேவன் அவர்களுக்கென சொந்தமாக
தேச சட்டங்களைக் கொடுத்தார்;
அச்சட்டத்தின் அம்சங்களில் –
தேவனை எவ்வாறு வழிபட
வேண்டுமென்றும்
சகமனிதனிடம் எவ்வாறு
நடந்துக் கொள்ள வேண்டுமென்றும்
தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிந்தைய காலங்களில் இஸ்ரவேல்கள்
தங்களது மீறுதல்களினிமித்தம்
சுதந்திரத்தை இழந்து...
பாபிலோனிய சிறையிருப்பில் தவித்தபோது,
ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்குப்பின்,
பாரசீக அரசனால் எருசலேமுக்கு
திரும்புவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்று,
இஸ்ரவேலர்களில் எஞ்சியிருந்தவர்கள்
தங்கள் தேசத்தைச் சுதந்திரமாக
மீண்டும் கட்டியெழுப்பினார்கள்.
அவர்கள் தங்களது தேவாலயங்களையும்,
நகரச் சுவரையும் மீண்டும் கட்டி,
சுதந்திர வாழ்வை அனுபவித்தார்கள்
என வேதாகமம் மூலம் அறிகிறோம்.

விசுவாசிகளின் சுதந்திர தினம்:

பல நூற்றாண்டுகளுக்குப்பின்,
அப்போஸ்தலனாகிய பவுல் –
தனிமனித ஆவிக்குரிய
சுதந்திரத்தைப் பற்றி கூறியுள்ளார்.
இது வேறொரு அரசு கொடுக்கிற
சுதந்திரம் அல்ல,
தேவனால் அருளப்படும்
ஆவிக்குரிய சுதந்திரம் ஆகும்.
இச்சுதந்திர வாழ்க்கை
இயேசு, தீர்க்கதரிசிகள் மற்றும்
அப்போஸ்தலர்களின்
போதனைகளை அடிப்படையாகக்
கொண்டது.
ஆம்...,
உண்மையான சுதந்திரம்...
-இயேசுகிறிஸ்துவுடனான
தனிப்பட்ட உறவில்,
நமது இரட்சிப்பின் அனுபவத்தில்
தொடங்குகிறது.
ஏனெனில்...,
அவரே நமது உண்மையான
சுதந்திரத்திற்குக்
காரணராகவும், ஆதாரமாகவும் இருக்கிறார்.
அவரில்லாத வேறெந்த வாழ்வும்
எல்லாவித அடிமைத்தனங்களுக்கும்
வழிவகுக்கும்.
ஆம்...!
உண்மையான சுதந்திரமும்
பாவமும் இணைந்திருக்க முடியாது.
கிறிஸ்து நல்கும் உண்மையான சுதந்திரம்,
நமக்கு நல்குவது யாதெனில் –
பாவத்தின் சம்பளமாகிய
மரணத்திலிருந்து விடுதலை;
மரண பயத்திலிருந்து விடுதலை;
பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை.
அதோடு...,
நாம் ஜீவனுள்ள தேவனை நேசிக்கவும்,
அவருக்கு சேவை செய்யவும்,
அவரையே சார்ந்து
அவருடைய ஆளுகைக்குள்ளான
சுதந்திர வாழ்வை
வாழவும் வழிவகுக்குகிறது.
அதன் பொருட்டு,
கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு
எந்நாளும் சுதந்திர தினமே
என்றால் அது மிகையாகாது!

தேசம் மற்றும் ஆவிக்குரிய சுதந்திரத்தைக் கொண்டாடல்:

தேசத்தின் சுதந்திரத்திற்கும்,
கிறிஸ்து நமக்கு நல்கும் சுதந்திரத்திற்கும்
இடையே பல ஒற்றுமைகள் உள்ளன.
நம் நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த
தியாகிகளைப் போற்றிக்
கொண்டாடுவதுபோல,
பாவ, சாப அடிமைத்தனத்திலிருந்து
விடுதலை பெற்ற நாளையும்,
அதற்காக...
தம்மையே கிருபாதார பலியாகக் கொடுத்த
இயேசுகிறிஸ்துவையும்
நாம் போற்றவும் கொண்டாடவும் வேண்டும்.

ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆட்சியின்
அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று,
நம் நாட்டின் சொந்த குடிமக்களாக –
அச்சுதந்திரத்தை நாம்
கொண்டாடுவதுபோல,
நமக்கு தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய
சுதந்திரங்களை நல்கி,
தேவ ராஜ்யத்தின் சுதந்திரர்களாக
நம்மை மாற்றிய தேவனை நாம்
இச்சுதந்திர தினத்தில்
கொண்டாட வேண்டும்.

**இந்தியர்களாகிய நாம்
இழந்த உரிமைகளை
இச்சுதந்திரத்தின் மூலம் பெற்றதுபோல,
நமது ஆவிக்குரிய சுதந்திரத்தின் மூலம்,
நாம் இழந்த தேவசாயலை மீண்டும்
பெற்றுக்கொண்டது மட்டுமல்லாது,
இரட்சிப்பின் மூலம் நாம் தேவனுடைய
சொந்தப்பிள்ளைகளானதால் பெற்ற
தேவனுடைய சொல்லி முடியாத ஈவுகள்,
வல்லமைகள் மற்றும் கிருபைகளுக்காக
தேவனை இச்சுதந்திர நாளில்
கொண்டாட வேண்டும்.**

எனவே, இந்தியர்களாக நமது தேசத்தின்
சுதந்திரத்தைக் கொண்டாடுகிற
இந்நாட்களில்,
கிறிஸ்து நமக்கு நல்கியுள்ள
மெய்யான மற்றும் நிலையான சுதந்திரத்தை
நாம் ஒருபோதும் மறக்காலாகாது.

ஊழியத்தில் தேவனருளும் சுதந்திரத்தைப் பறைசாற்றல்:

நமது தேசத்தின் சரிதையை
வேதாகம சரிதையோடு
சேர்த்து படிக்கும்போது,
தேசத்தின் விடுதலைக்கும்,
வேதாகமத்தின் மீட்பின் செய்திக்கும்
நல்லதொரு உறவைக் காணலாம்.
**இயேசு நம்மை...
இந்தியர்களாகவே இரட்சிக்கிறார்.**
அவர் நிறுவுகிற தேவராஜ்யத்தில்
தேசிய விடுதலையின் தாக்கங்களும்
இருப்பதைக் காணலாம்.
இயேசு, தேவராஜ்யத்தை ஒடுக்கப்பட்டவர்கள்
மற்றும் நசுக்கப்பட்டவர்களுக்கு
உரிய இடமாகக் கண்டார்;
அவர் ஆவியில் எளிமையுள்ளவர்களையும்,
சிறுமைப்பட்டவர்களையும் தேவராஜ்யத்திற்கு
உரியவர்களாக அடையாளப்படுத்தினார்;
சத்துவமற்றவர்கள் மற்றும்
பெலவீனமானவர்களைப் பாதுகாக்க,
அவர்கள்மீது மதிப்பும் மரியாதையும்
கொண்டிருந்தார்.
அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் சிறந்த
குடிமக்களாகக் கருதப்பட்டனர்.
லூக்கா சுவிசேஷகன் இதை தெளிவாகக்
கோடிட்டுக் காட்டுகிறார் –
"கர்த்தருடைய ஆவியானவர்
என்மேலிருக்கிறார்;
தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப்
பிரசங்கிக்கும்படி
என்னை அபிஷேகம் பண்ணினார்;
இருதயம் நருங்குண்டவர்களைக்
குணமாக்கவும்,
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,
குருடருக்குப் பார்வையையும்
பிரசித்தப்படுத்தவும்,

நொறுங்குண்டவர்களை
விடுதலையாக்கவும்,
கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப்
பிரசித்தப்படுத்தவும்,
என்னை அனுப்பினார்" (லூக்.4:18-19).

தேவராஜ்யத்தின் தரிசனம் -
தேவனுடைய சித்தம்,
'பரலோகத்தில் செய்யப்படுவதுபோல
பூமியிலேயும்
செய்யப்பட வேண்டும்' (மத்.6:10) என்பதே.
மெய்யான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு
நமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதோடு,
நமது தேசத்தின் குடிகளும்
மேலான சுதந்திரத்தை நாடிப் பின்பற்ற
நாம் உழைக்க வேண்டும்.

அமெரிக்க வரலாற்றின் முன்னோடியும்,
அரசியல் தலைவருமான
பெஞ்சமின் ஃபிராங்க்ளின் அவர்கள்
அறுதியிட்டுக் கூறியிருப்பதுபோல,
எந்த சுதந்திரத்திலும்,
'நாம் அனைவரும் ஏதோ ஒன்றால்
ஆளப்படுவோம்.
ஆதலால், உண்மையான மற்றும்
நித்திய சுதந்திரத்திற்கான வழியை
நமக்குக் காட்டும் தேவனால்
ஆளப்படுவதை நாம் தெரிந்தெடுப்போம்.'

ஆகவே, விசுவாசிகளாகிய நாம்
நமது சுதந்திரத்தைப் பயன்படுத்தி,
தேவனின் சித்தத்தையும்,
திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு,
அவருடைய பிரதான கற்பனைகளாகிய -
"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்
உன் முழு இருதயத்தோடும்,
உன் முழு ஆத்துமாவோடும்,
உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக;
உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப்
பிறனிடத்திலும் அன்புகூருவாயாக"
(மத்.22:37-39)
என்பதை நாம் கடைபிடிக்க வேண்டும்.
தேவன்மீதும் மற்றவர்கள்மீதுமுள்ள
இந்த அன்பின் அடிப்படையில்தான்,
தேவனின் ஒப்பற்ற அன்பை
அவருடைய குமாரனாகிய
இயேசுகிறிஸ்துவின்
'பிரதான கட்டளையாக' நாம்
நமது தேசத்திற்கு எடுத்தியம்ப முடியும்.
ஆம்...! நாம்
'தேவனுடைய ராஜ்யம் வருவதாக'
என்று ஜெபிப்பது மட்டுமல்ல,
தேவராஜ்யம் பரவுவதற்காக
செயல்படவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆவிக்குரிய சுதந்திரம் - நமது தேசமக்களின் பிறப்புரிமை:

"சுதந்திரம் எனது பிறப்புரிமை;
அதை நான் அடைந்தே தீருவேன்" என்று
நமது இந்திய சுதந்திரப் போராட்ட வீரராகிய
பாலகங்காதர திலகர் முழங்கி,
நமது இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு
புத்துயிர் கொடுத்தார்.
அதுபோல...,
ஆவிக்குரிய சுதந்திரமும்
நமது தேசமக்களின் பிறப்புரிமை.
ஏனெனில்,
"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்,
சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்,
அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்"
என (1தீமோ.2:4)
புனித பவுல் குறிப்பிடுகிறார்.
இந்தியர்களாகிய நாம்
சுதந்திர தேசத்தில் வாழலாம்;
ஆனால்,
நமக்கு அரசியல் மற்றும் தனிப்பட்ட
சுதந்திரங்கள் இருந்தாலும்,
கிறிஸ்து இல்லாவிட்டால் - நாமனைவரும்
சிறையிலிருக்கும் கைதிகளைவிட,
பெரிய அடிமைத்தனத்திற்கு உட்பட்டவர்கள்
என்பதே உண்மை.
எனவே, நம் தேசமக்கள் அனைவரும்
மெய்யான சுதந்திரத்தைப்
பெற்றனுபவிக்க இயேசு விரும்புகிறார்.

ஆம், நித்திய சுதந்திரம் என்றால்
அது ஆவிக்குரிய சுதந்திரமே!

நமது தேசத்தின் சுதந்திர தினத்தை
நாம் கொண்டாடும் இந்நாட்களில்,
முன் எப்போதும் இல்லாத வகையில்,
தேவனின் அன்பு நம் மீதும்,
நம் தேசத்தின் மீதும்
அளவில்லாமல் பொழியப்படட்டும்!
விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும்
நமக்குப் பரிட்சயமான, செல்வாக்கு
மிகுந்த பகுதிகளில் தேவனருளியுள்ள
சுதந்திரக் காற்றை வீசச் செய்வோம்!
நாம் தேவனுக்கும், நமது தேசத்திற்கும்
உண்மையுடன் காணப்படுவோம்.
இந்த ஆகஸ்ட் 15-ம் தேதி,
இந்தியர்களாக நாம் கடந்து வந்த
அடிச்சுவடுகளைப் பெருமிதத்துடன்
திரும்பிப் பார்க்கும் வேளையில்,
நமது தேசத்தாருடைய
'முழங்கால் யாவும் முடங்கும்,
இயேசுகிறிஸ்து கர்த்தரென்று
நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்'
(பிலி.2:10-11) என்பதையும்
விசுவாச கண்களோடு பார்த்து,
அதற்காக...
நமது வாழ்வை தேவனுக்கும்,
அவருடைய சித்தத்திற்கும்
அர்ப்பணிப்போம்.
ஒருநாள் வரும்...
அன்று அனைத்து இந்திய மனங்களிலும்
தேவனுடைய சுதந்திரம் குடிகொள்ளும்!
ஆம், "கர்த்தரைத் தங்களுக்குத்
தெய்வமாகக்கொண்ட ஜாதியும்,
அவர் தமக்குச் சுதந்தரமாகத்
தெரிந்துகொண்ட ஜனமும்
பாக்கியமுள்ளது" (சங்.33:12) என்கிற
சங்கீதக்காரனின் பூர்வ வரிகள்,
நமது தேசத்தில்
வெகுவிரைவில் நிஜமாகிடுமன்றோ!

சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!

- அருள்திரு. அறிவர். JJ. ஹாரிஸ்,
செயலர் -
மனிதவள மேம்பாட்டுத்துறை, FMPB

மிஷனெரிப் பிரதிஷ்டை



மதுரை, நரிமேடு - நேரு பள்ளியில் வைத்து கடந்த 12.06.2022 அன்று நடைபெற்ற ஸ்கேன் குடும்பக்கூடுகையில், அருட்திரு. தாசையன் அவர்களால் நமது மிஷனெரி சகோ. S. ராஜன், (ஹசேரன் பணித்தளம், உத்தரப்பிரதேசம்) பிரதிஷ்டை செய்யப்பட்டார். அவரை ஜெபித்துத் தாங்குகிற திரு. N.T.K.P. பால் அவர்களின் குடும்பத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிஷனெரிப் பிரதிஷ்டை
தஞ்சாவூர்



நமது மிஷனெரிகள் குமாரி. ஏஞ்சல்ராஜ், திருமதி. ஷைனி ஸ்நேகா அல்போன்ஸ் மற்றும் சகோ. அல்போன்ஸ் ஆகியோர் தஞ்சாவூர், CSI - தூய பீட்டர் தேவாலயத்தின் குருவானவர் அருட்திரு. ஜேம்ஸ் பால் அவர்களால் கடந்த 2022 ஜூலை 10-ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இவர்களை ஜெபத்தாலும், ஈகையாலும் தாங்குகிற தூய பீட்டர் திருச்சபைக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆவிக்குரிய சுதந்திரம்



"நீங்கள் மறுபடியும் அடிமைத் தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" - (கலா.5:1).

"... இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்குகொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" - (கலா.5:13).

நாம் எவ்வாறு, எத்தகைய ஆவிக்குரிய சுதந்திரம் அடைந்திருக்கிறோம்? எதற்காக அதை அடைந்திருக்கிறோம்? என்பதை மேலே தரப்பட்டுள்ள இரு வசனங்களைக் கொண்டு சிற்சில உதாரணங்களுடன் சற்று சுருக்கமாகத் தியானிக்கலாம்.

1. அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் (சுயாதீனம்):

இயேசுகிறிஸ்து அவரது சொந்த இரத்தத்தினாலே நம்மை நமது பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கின்றார். *"...குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். ...நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோ.1:7-9).*

- கிறிஸ்து நம்மை நமது கடந்த கால பாவத்திலிருந்து மாத்திரமல்ல, நிகழ்காலத்து பாவத்திலிருந்தும் விடுவிக்கிறார். எனவே நாம் பாவ அறிக்கை பண்ணும்போது, 'நான் பாவி' என்று சொல்வது மட்டும் போதாது; நாம் தற்சமயம் வரை செய்திருக்கின்ற ஒவ்வொரு பாவத்தையும் நினைத்துப்பார்த்து, அதை அறிக்கையிட்டு, அவை யாவற்றிற்காகவும் அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அதனால் தான், யோவான் இங்கே மிகத் தெளிவாக நாம் பாவத்தை அறிக்கையிட வேண்டுமென கூறுகிறார்.

- இயேசுகிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால் ஒரே தரமாக நம் அனைவரின் பாவத்திற்கான தண்டனைக்கு தம்மையே கிருபாதார பலியாக செலுத்தியிருக்கிறார். ஆகவே, நாம் ஒவ்வொரு நாளும் நமது பாவங்களுக்கு மரிக்க வேண்டும். நாம் மறுபடியும் மறுபடியும் பாவம் செய்து கொண்டே இருந்தால், நாம் நமது பாவங்களுக்காக மரிக்காமல் அப்பாவத்திலேயே ஜீவித்துக் கொண்டிருக்கின்றோம் என்றுதான் அர்த்தம். அப்படியானால், நாம் இன்னும் மெய்யான முழுமையான ஆவிக்குரிய சுதந்திரத்தை அடையவில்லை என்பது தான் நிதர்சனம்.

- நமது தேவன் கிருபையுள்ளவர். யோ.6:37-ல் "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்றும், சங்.103:8-10-ல் "கர்த்தர் உருக்கமும்,

இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார்'' என்றும் வாசிக்கிறோம். ஆயினும் நமது தேவன் கிருபையுள்ளவரானபடியினாலே, நாம் திரும்பத்திரும்ப பாவம் செய்யலாம் எனப் பொருள்படாது. உதாரணமாக, நமது வீட்டில் துணிகளைச் சுத்தம் செய்ய சோப்பு வைத்திருக்கிறோம். அதுபோக, அந்த துணிகளைச் சுத்தம் செய்ய ஒரு அன்பான தாயும் நமது வீட்டில் இருக்கிறார்கள். அதற்காக நாம் துணிகளை வேண்டுமென்றே மீண்டும் மீண்டும் அழுக்காக்கி விட்டு, நம் தாயை நோக்கி, 'இத்துணிகளைச் சுத்தம் செய்யுங்கள்' என சொன்னால், அது எவ்வண்ணம் இருக்கும்? இதே போன்றுதான் இயேசுகிறிஸ்துவும் நமது பாவங்களைக் கழுவ ஆயத்தமாக இருக்கிறார். அதற்காக நாம் திரும்பத் திரும்ப பாவம் செய்துவிட்டு, அவர் நமது பாவத்தை மன்னிப்பார் என்று நினைத்து, பாவ அறிக்கை செய்துவிட்டு, நம் மனம்போன போக்கில் வாழ்வது தவறு. நாம் நமது வாழ்க்கையில் வேண்டுமென்றே பாவம் செய்வதைத் தவிர்த்தல் மிகமிக அவசியம்.

2. சுதந்திரத்திலே நிலைகொண்டிருங்கள்:

நாம் இனி பாவம் செய்யக்கூடாது என்ற நிலைபாட்டில் மனஉறுதியுடன் இருக்க வேண்டும். யோயாக்கீம் ராஜா தன் மனக்கடினத்தினிமித்தம் எரேமியா எழுதின சுருளைத் தீயினால் சுட்டெரித்தான். எரே.36:28-ல் தேவன் எரேமியாவை இரண்டாவது சுருள் எழுதும்படி கூறுகிறார். இந்த ராஜாவின் பாவத்தினாலே ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போயினர். சிறைப்பிடிக்கப்பட்ட ஜனங்களுக்குள் தானியேல், அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியாவும் இருந்தனர். இவர்கள் தங்களைக் கறைபடுத்திக் கொள்ளக்கூடாது என்பதில் மிக உறுதியான நிலைகொண்டிருந்தனர். எனவே, தேவன் அவர்களை உயர்த்தினார். அந்நிய நாட்டில் தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி தானியேல் ஓர் தீர்க்கமான முடிவு எடுத்திருந்ததால், தேவன் அவனை ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்திற்கு உயர்த்தினார். தானியேலின் ஜெப வாழ்வு, 'யெகோவாவே தேவன்' என்பதை தரியு ராஜாவுக்கு தத்ரூபமாக நிரூபித்துக்காட்டியது. இதை தானி.6:26-ல் ''என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்,'' என நாம் வாசிக்கிறோம். தானியேலும், அவரது நண்பர்களும் அடிமைகளாகச் சிறைப்பட்டுப் போயிருந்தாலும், தேவன் அவர்களைப் பாபிலோன் மாகாணத்திலே மிகுந்த பலமுள்ள தலைவர்களாக உயர்த்தினார். ஆனால், யோயாக்கீம் ராஜாவோ அடிமையாகச் சிறைப்பிடிக்கப்பட்டு, அங்கேயே மரித்தும் போனான். ஆகவே, நமக்கு கிருபையாய் அருளப்பட்டிருக்கும் இந்த ஆவிக்குரிய சுதந்திரத்தில் என்றுமே நிலைகொண்டிருப்பது நமக்கு மிகுந்த ஆசீர்வாதம்.

3. சுதந்திரத்தினாலே உதவி செய்யுங்கள்:

– நாம் பாவ அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் பெற்றவர்களாயிருந்தாலும், நமது வாழ்க்கை பரிசுத்தமானதாகவும் அப்பழுக்கற்றதாகவும் திகழ வேண்டும். ஏனெனில், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும்

கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (ஏபி.12:14) என்று வேதம் சொல்லுகிறது. இந்தப் பரிசுத்தமான ஆவிக்குரிய சுதந்திர வாழ்வைக் கொண்டு நாம் பிறருக்கு உதவி செய்து, அவர்களையும் கிறிஸ்துவண்டை வழிநடத்தி, அவர்களும் இந்த ஆவிக்குரிய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

அதற்கு உதாரணமாக இச்சாட்சியைக் கூற விரும்புகிறேன்: "கடந்த 40 வருடங்களாக நான் குஜராத்தில் முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தேன். என் ஊழியத்தின் ஆரம்ப காலத்தில், அம்பாபானி கிராமத்தைச் சேர்ந்த சிலர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். கிராமத்தலைவர் இதனைக் கண்டு கோபமூண்டவராகி, 'புதிய கிறிஸ்தவர்கள் எவரும் கிராமத்து கிணற்றில் தண்ணீர் இறைக்கக் கூடாது' என ஒரு சட்டத்தை உண்டாக்கினார். இதனால் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டு, அந்தச் செய்தியை புதிய விசுவாசிகள் என்னிடம் வந்து கூறினர். இவ்வாறு கிராமத்தலைவர் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது என்பதால், மாவட்ட காவல் நிலையத்தில் இதைக் குறித்து புகார் அளிக்க வேண்டுமென அவர்கள் விரும்பினர். அப்போது நான் புதிய விசுவாசிகளை ஆலயத்தில் கூடிவரச் செய்து, நாங்கள் யாவரும் ஒரே மனதோடு இசைந்து இதற்காக ஜெபம் செய்தோம். ஜெபவேளையின் போது, ரஞ்ஜித் என்ற ஒரு விசுவாசி ஒரு தரிசனம் கண்டார். அவர் தனது நிலத்தில் ஒரு கிணறு தோண்ட வேண்டுமென தேவன் அவருக்குச் சொன்னதாகக் கூறினார். அத்தனை விசுவாசிகளும் அதற்கு உடன்பட்டு, ரஞ்ஜித்தின் நிலத்தில் கிணறு தோண்டினர். அனைவரும் இணைந்து அப்பணியைச் செய்தபோது, 10 அடி ஆழத்திலேயே தண்ணீர் ஊற்றுப்போல் பெருக்கெடுத்து வந்தது. விசுவாசிகள் தங்களது வழக்கத் தின்படி, அந்தப் புதிய கிணற்றிற்கு களி மண்ணினாலும், தேக்குமர இலையி னாலும் ஒரு சுவர் எழுப்பினர். இப்போது புதிய விசுவாசிகளுக்கு நல்ல தண்ணீர் கிடைத்தது. இது ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடந்தது. மே மாதத்தில் அம்பாபானி கிராமத்து கிணற்றில் தண்ணீர் வற்றிப்போனது. கிராமத்து மக்கள் 5 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு கிணற்றுக்கு நடந்துப்போய் தண்ணீர் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதே நேரத்தில், ரஞ்ஜித்தாயின் கிணற்றிலோ தண்ணீர் இருந்தது. எனவே கிராமத்தலைவரின் துணைவியார் ரஞ்ஜித்தின் மனைவியிடம், ''உங்கள் கிணற்றில் நான் தண்ணீர் இறைத்துக்கொள்ளலாமா?'' எனக் கேட்க, ரஞ்ஜித்தின் மனைவி, "கிராமத்தி லுள்ள அனைவரும் இதில் தண்ணீர் இறைக்கலாம்!" என உதவிக்கரம் நீட்டினார். இந்தப் புதிய விசுவாசிகளின் இரக்ககுணம், அவர்களை மிகக் கடினமாக நடத்திய கிராமத்தலைவரின் உள்ளத்தை ஈர்த்தது. எனவே அவர், 'கிறிஸ்தவர்கள் இரக்கமும் அன்புமுடையவர்கள்' என்று கூறி, இயேசுவைப் பற்றி அறிய விரும்பினார். இதன் விளைவாக, கிராமத்தலைவரும் அங்கிருந்த 40 குடும்பத்தினரும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். விசுவாசிகளின் ஒன்றிணைந்த அன்பு 40 குடும்பங்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தியது." இவ்வாறு, ஆவிக்குரிய சுயாதீனத்துடன் கூடிய ஒற்றுமையான அன்புடன் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்யும்போது, இரட்சிக்கப்படாத அநேகர் இந்த ஆவிக்குரிய சுதந்திரத்தைச் சுதந்தரிக்க தேவன் கிருபை நல்குவாராக!

- அருட்திரு. ஜாண்சன் பர்னபாஸ்,
FMPB - மிஷனெரி (ஓய்வு).



பணித்தள விஜயம் & ஆலயப்பிரதிஷ்டை

திருச்சி கருமண்டபம் பெண்கள் ஜெபக்குழு

திருச்சி மற்றும் மேட்டுப்பாளையம் தலைவர்கள், ஆதரவாளர்கள் என 9 பேர் கொண்ட குழுவாக நாங்கள் ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு ஏப்ரல் 28-ம் தேதி திருச்சியிலிருந்து புறப்பட்டுச் சென்று, பர்ஹர்வா - கடி என்ற இடத்திலுள்ள சமுதாய கல்லூரியை 29-ம் தேதி சென்றடைந்தோம். 30-ம் தேதி காலை, மால்தோ மண்ணில் கோதுமை மணிகளாக விதைக்கப்பட்டுள்ள நமது ஊழியர்களின் கல்லறைகளில் ஜெபித்து விட்டு, பெடோ பொக்காரியா கிராமத்தில் செயல்பட்டு வரும் பகல்நேர பராமரிப்பு மையத்தில் கல்விப்பயின்று வரும் மாணவ மாணவிகளையும் ஆசிரியர்களையும் சந்தித்தது, எங்கள் அனைவருக்கும் மறக்க முடியாத நல்லதொரு அனுபவமாக இருந்தது. அதன்பின் டோனி பிச்சகனியில் செயல்பட்டு வரும் மால்தோ பகல்நேர பராமரிப்பு கல்வி மையம் மற்றும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக நடத்தப்பட்டுவரும் பந்தேனி ஆங்கிலவழிப் பள்ளியையும் பார்வையிட்டு, அன்றிரவு கங்குபாடா விடுதியில் ஆயத்தம் செய்யப்பட்டிருந்த கலாச்சார நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மிகுந்த உற்சாகம் அடைந்தோம். பின்பு மே 1-ம் தேதி ரங்கா பகுதியிலுள்ள சந்தால் சிறுமியர் விடுதியில் ஜெபித்து விட்டு, பின் போரியோ பகுதியிலுள்ள தெலோ பணித்தள சிந்துவா கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்திற்குச் சென்றடைந்தோம். அங்கு எங்களை வரவேற்க விசுவாசிகள் மிகுந்த ஆவலுடன் காத்திருந்தனர். கர்த்தருடைய பெரிதான கிருபையால் அந்த ஆலயம் தேவ நாம மகிமைக்காக மிகச் சிறப்பாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விசுவாசிகள் அவ்வாராதனையில் உற்சாகமாக தேவனை ஆராதித்ததும், வசதி குறைவுகளின் மத்தியிலும் அவர்களின் அனுபவ சாட்சிகளும் மற்றும் கர்த்தர் மேல் அவர்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கை, வாஞ்சை எங்களை வெகுவாய் கவர்ந்தது. கடந்த 2018 மார்ச் மாதத்தில் தெலோ பணித்தளத்தில் நடத்தப்பட்ட சந்தால் விசுவாசிகளின் மேளாவில் நாங்கள் கலந்து கொண்டபோது, இவ்விசுவாசிகள் தற்காலிக மாகக் கட்டப்பட்ட ஒரு இடத்தில் தேவனை ஆராதித்து வந்ததைக் கண்டு, திருச்சி கருமண்டபம் ஜெபக்குழு பெண்களாகிய நாங்கள் எங்கள் ஜெபக்குழுவின் சார்பில் இங்கு ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தோம். எங்கள் தீர்மானத்தையும் உற்சாக ஜெபத்தையும் கண்ட தேவன், பல தடைகளின் மத்தியிலும் இந்த ஆலயம் தேவநாம மகிமைக்காகக் கட்டப்படவும், நாங்கள் இப்போது இவ்வாலயப் பிரதிஷ்டையில் கலந்து கொள்ளவும் கிருபை செய்தார். பின்பு ஒவ்வொருவரும் ஆத்துமபார தரிசனத்தை மனதில் கொண்டு, ஏதாவது தேவனுக்காகச் செய்ய வேண்டும் என்ற துடிப்போடு ஊர் திரும்பினோம். நாங்கள் மிஷனெரி ஊழியங்களுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்கவும் கொடுக்கவும் அநேகருக்கு ஆசீர்வாதமாக வாழவும் தேவன் எங்களுக்குக் கிருபை செய்வாராக!

பணித்தள விஜயம்

குஜராத்



கடந்த மே மாதம் 29-ம் தேதி இரவு இராமநாத புரத்திலிருந்து 21 பேர் கொண்ட குழுவாக நாங்கள் குஜராத்திற்குப் பணித்தள விஜயமாக இரயிலில் பயணம் செய்து, 31-ம் தேதி நேத்ரங் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் கவாண்ட் பணித்தள மத்வாட் கிராமத் திற்குச் சென்று சேரும்போது, அங்கு எங்களுக்காக மக்கள் உபவாசத்தோடு தேவனை ஆராதிப்பதற்குக் காத்திருந்தது, பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தங்களது சொந்த மொழியில் தேவனை ஆராதித்து மகிமைப்படுத்தியதுமல்லாமல், எங்களை அன்பாய் நலம் விசாரித்து உபசரித்த விதத்தைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனோம். தொடர்ந்து டேடியப்பாடா, செலம்பா, பார்டோலி பணித்தளங்களையும் விஜயம் செய்து, அவர்களின் வரவேற்பிலும் உபசரிப்பிலும்கூட பரலோக மேன்மையை அதிகமாக உணர்ந்தோம். தொடர்ந்து ஜாவ்டா ஆங்கிலப்பள்ளி, கெர்காம் விடுதி களையும் விஜயம் செய்து, அங்குள்ள காரியங்களைப் பற்றியும் அதிகமாகத் தெரிந்து கொண்டதோடு, அதன் விளைவுகளையும் தேவைகளையும் அறிந்து கொண்டோம். கடைசி நாளன்று மோட்டாபொண்டா பணித்தளத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் வார்லி, தோடியா இனமக்களோடு தேவனை ஆராதிக்கும்போது, ஜீவனுள்ள தேவனின் அன்பையும் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலையும் 'இயேசு' எனும் நாமத்தின் மேல் அம்மக்கள் கொண்டுள்ள பக்தி வைராக்கியத்தையும் பார்த்து, அங்குள்ள மிஷனெரிகளின் அர்ப்பணிப்பையும் ஊழியத்தையும் தேவன் எவ்வாறு கனம் பண்ணியுள்ளார் என்பதைக் கண்டு, மனதார தேவனை மகிமைப்படுத்தினோம். இத்தகைய புதிய அனுபவத்தை அடைந்த நாங்களும் தேவனுக்காக ஏதாவது செய்ய, ஆத்துமா ஆதாயப்பணிக்கென உழைக்கும் FMPB ஊழியத்தை ஜெபித்துத் தாங்குவோம் என தீர்மானித்து, புதுபெலத்தோடு திரும்பினோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - திருச்சி

மிஷனெரித் தரிசன கூடுகை - 2022

சிறப்பு உபவாச ஜெபம் நாள்: 27.08.2022 (சனிக்கிழமை)

நேரம்: காலை 10 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தரிசனக்கூடுகை நேரம்: மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை

தரிசனக்கூடுகை நாள்: 28.08.2022 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: காலை 8.30 முதல் 1.00 மணி வரை; மாலை 6.30 முதல் 8.30 மணி வரை

இடம்: CSI - இம்மானுயேல் ஆலயம், இம்மானுயேல் நகர் (Near BHEL "R" Sector).

குறிப்பு: சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மதியம், இரவு உணவு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

தொடர்பு: 82329 83619



மிஷனெரி பிரதிஷ்டை

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சுர்கானா பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி திரு. மயில்சாமி அவர்கள், கடந்த 29 மே 2022-ம் தேதி, ராமேஷ்வரத்திலுள்ள நல்ல மேய்ப்பர் ஆலயப் போதகர் அருட்திரு. ஜோசப் டேனியல் அவர்களால் தேவ ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டார். இச்சபையார் தங்களது ஊக்கமான ஜெபத்தாலும், உதாரத்துவமான காணிக்கைகளாலும் நமது இயக்கத்தில் 3 ஊழியர்களைத் தாங்கி வருகிறார்கள். நமது தேசத்தில் அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தால், FMPB ஊழியங்களில் இப்போதகர் மற்றும் சபையாகக் கொண்டிருக்கும் முக்கியப்பங்கிற்காக தேவனை அதிகமாய் துதிக்கிறோம்.

திருவெற்றியூர், வட சென்னை

பங்காளர்களின் குடும்பக்கூடுகை - 2022

நாள்: 14.08.2022 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 5 மணி
இடம்: S.K. மஹால், காலடிப் பேட்டை.
சிறுவர்களுக்கு தனிக் கூடுகை உண்டு.
தொடர்பு: 98840 28607

நெல்லை - வடக்கு பணி மாவட்டம்

குடும்பக்கூடுகை - 2022

நாள்: 15.08.2022 (திங்கட்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை
இடம்: TDTA தொடக்கப்பள்ளி வளாகம், வாகைக்குளம்.
மதிய உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
தொடர்பு: 94451 19789

ஒருநாள் வாலிபர் கூடுகை

நாள்: 15.08.2022
(திங்கட்கிழமை) சுதந்திர தினம்
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை
இடம்: CSI - பரி.மேசியாவின் ஆலயம், பண்டாரவிளை,
தூத்துக்குடி மாவட்டம்.
தொடர்பு: 76396 56577

திருச்சி

விசுவாச மகளிர் கூடுகை - 2022

நாள்: 20.08.2022 (சனிக்கிழமை)
நேரம்: 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம்: CSI ஆல்செயிண்ட்ஸ் சர்ச், Parish Hall, புத்தூர், திருச்சி - 17
பதிவு கட்டணம்:
பெரியவர் ரூ.30/- சிறுவர் ரூ.20/-
தொடர்பு: 95005 75928

பெண்கள் மிஷனெரித் தரிசன கூடுகை

நாள்: 19.08.2022 (வெள்ளிக்கிழமை)
நேரம்: காலை 9 மணி முதல்
மாலை 4 மணி வரை
இடம்: சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

பெண்கள் மிஷனெரித் தரிசன கூடுகை

நாள்: 31.08.2022 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி முதல்
மாலை 4 மணி வரை
இடம்: தூய யாக்கோபு ஆலயம்,
நீவிபுரம், தூத்துக்குடி.

பெண்கள் கூடுகை - 2022

நாள்: 31.08.2022 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி முதல்
மாலை 4.30 மணி வரை
இடம்: CNI - பெத்தானி தமிழ் சர்ச்,
மீரா ரோடு, மேற்கு மும்பை.

பெண்கள் மிஷனெரித் தரிசன மாநாடு - 2022

நாள்: 31.08.2022 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை
4.30 மணி வரை
இடம்: சி.எஸ்.ஐ. கிறிஸ்து ஆலயம்
(ஜெயநகர் - பெங்களூரு)
சிறுவர்களுக்கு தனிக்கூடுகை உண்டு.
மதிய உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டின் உண்டியல்களைக்
கொண்டுவரவும்.
பதிவு கட்டணம்:
பெரியவர் ரூ.30/- சிறுவர் ரூ.10/-
தொடர்பு: 82923 90481

பெண்கள் கூடுகை - 2022

நாள்: 31.08.2022 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி முதல்
மாலை 5.00 மணி வரை
இடம்: அமெரிக்கன் கல்லூரி
ஆடிட்டோரியம், மதுரை.
சிறுவர்களுக்கு தனிக்கூடுகை உண்டு.
மதிய உணவு ஒழுங்கு
செய்யப்பட்டுள்ளது.
தொடர்பு: 97860 75860

பெண்கள் கூடுகை - 2022

(வட சென்னை - வில்லிவாக்கம் விரிவுப்பணி)

நாள்: 31.08.2022 (புதன்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி முதல்
மாலை 2.00 மணி வரை
இடம்: "சாஸ்தா நகர் கிறிஸ்டியன்
அசம்பிளி", சாஸ்தா நகர்,
வில்லிவாக்கம், சென்னை 49.
சிறுவர்களுக்கு தனிக்கூடுகை உண்டு.
தொடர்பு: 99418 16534

சேர்த்து வாசிக்கவும் - ஆலயப்பிரதிஷ்டை

மகாராஷ்டிராவிலுள்ள ஜவகர் பணித் தளத்தில் கட்டப்பட்டுள்ள சிங்கலிச்மால் ஆலயக்கட்டுமானத்தில் திண்டிவனத்தைச் சேர்ந்த திருமதி. J.A. மெர்சி பிரபாவதி அவர்களின் குடும்பத்தாரின் பங்கும் இருப்பதை அறிந்து தேவனைத் துதிக்கிறோம்.

கடந்த 2022 ஜூலை மாத அறைகூவல் பத்திரிக்கையின் பக்கம் 19-ல் "பணித்தள விஜயமும் ஆலயப்பிரதிஷ்டையும்" என்கிற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியோடு, இதையும் சேர்த்து வாசிக்கவும். இக்குடும்பத்தாரை தேவன் தொடர்ந்து தமது கிருபையாலும் நன்மையாலும் முடிசூட்டி வழிநடத்த ஜெபிப்போம்.

மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



ஸ்டேட் பாங்க் வங்கி அதிகாரியாகிய திருமதி. பியூலா மோசஸ் (வயது -75) அவர்கள், தாம்பரம் ஸ்டேட் பாங்க் காலனியில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஜெபக்குழுத்தலைவியாகப் பணிபுரிந்து, நமது இயக்கத்திற்கு இப்பகுதியில் ஒரு நற்தூணாக விளங்கினார்கள். இவர் கடந்த 05.05.2022 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார். இவரும் இவருடைய மகன்களான திரு. அசோக் பிரின்ஸ், திரு. கிங்ஸ்லி விஜய் இருவரும் மூன்று மிஷனெரிகளைத் தங்களது ஊக்கமான ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் தாங்கினார்கள். இவர் ஊழியர்களை வரவேற்பதிலும், கனம்பண்ணுவதிலும், ஊழியத்தின் தேவைக்காகக் கொடுப் பதிலும் மிகச்சிறந்த தாயாராக விளங்கினார். இவரின் தியாகமான வாழ்க்கைக்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம். இவரின் பிரிவால் வாடும் இருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகளுக்காக ஜெபிப்போம்.



மேற்கு மும்பையை மையமாக வைத்து நமது ஊழியத்தின் விரிவுப்பணி கௌரவ செயலாளராகச் செயல்பட்டு வந்த சகோ. அலெக்ஸாண்டர் துரை (வயது-59) அவர்கள், கடந்த 2022 ஜூன் 30-ம் தேதியன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். இவரது ஊழியங்கள் வசாய் ரோடு, நல்ல சோப்ரா மற்றும் விரார் பகுதிகளில் மிகவும் சிறப்பாக அமைந் திருந்தன. இவரது பிரிவால் வாடும் இவருடைய மனைவி மற்றும் மகனுடைய குடும்பத்தை நமது ஜெபங்களால் தாங்கிக் கொள்வோம்.



சென்னை - அம்பத்தூர் பகுதியில் ஸ்கேன் தலைவியாக ஊழியத்தை நிறைவேற்றிய திருமதி. மேரி ஜெபமணி அவர்கள் (வயது-67), கடந்த 05.07.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். இவர் அரசாங்கப்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியையாகப் பணிசெய்து ஓய்வு பெற்றவர்; மிகவும் சுறுசுறுப்பானவர். இவர் அம்பத்தூர் பகுதியின் ஆரம்பகால ஜெபக்குழுத்தலைவியாக, வியாபார ஸ்தலங்களுக்குச் சென்று காணிக்கை சேகரித்தும், FMPB மாநில முகாம்களில் சிறுவர் பிரிவில் இணைந்தும் சிறப்பாக ஊழியம் செய்தார். இவரது கணவர் திரு. சாம் தசகரன் மற்றும் இவர்களது பிள்ளைகளின் குடும்பத்தினருக்கும் தேவன் சமாதானத்தையும், ஆறுதலையும் அருள அனைவரும் ஜெபிப்போம்.




வாழ்த்துகிறோம்!

CSI, மதுரை-இராமநாதபுரம் திருமண்டலத்தின் 7-வது பேராயராகப் பொறுப்பேற்றுள்ள பேரருட்திரு. முனைவர். D. ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் M.A., B.D., P.G.D.Th., D.D., அவர்களின் பணி சிறக்க நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரி களாக, தலைவர்களாக, அங்கத்தினர்களாக ஜெபிக்கிறோம், வாழ்த்துகிறோம்!

முடிவு ஆரம்பமானது!

மகாராஷ்டிரா, சோப்டா பணித்தள மகாதேவ் கிராம சவிதாபாய், கடந்த சில மாதங்களாகவே வலிப்பு நோயினால் அவதிப்பட்டு வந்தார். அதுபோலவே, அவர் கடந்த மாதமும் கடும் வலிப்பு வந்து மரித்தே போனார். கிராம மக்களும் சில விசுவாசிகளும் அவரது அடக்க ஆராதனைக்காகக் கூடியபோது, இவ்விசுவாசிகள் அவருக்காக ஜெபித்தனர். ஜெபித்ததின் விளைவு, மரித்த சவிதாவை தேவன் உயிர்ப்பித்தார். அல்லேலூயா!



காணிக்கை அனுப்புவதற்கு
பார்கோடு வசதி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் கீழ்காணப்படும் பார்கோடு வசதியையும் தேவையானால் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.





பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மதுரா சாந்தி ரம்யா ராஜு
திரு. மஞ்ஜ்யா நாயக் G., திரு. ராஜா B.
திருமதி. ஃப்ளாரன்ஸ் தெளஜபாவ்
திருமதி. ஜெபராணி எபநேசர் சாம்
திரு. க்ருபா ரக்ஷ்னா பரே

ஜம்மு

சாம்பா:

டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 20 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும் 2 முழு வேதாகமப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. பிரவீன் என்பவர் குடலிறக்கப் பிரச்சனையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றுள்ளார். நமது விசுவாசிகள் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உற்சாக ஈடுபாடு காட்டி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பின்மாற்றமடைந்திருக்கும் கட்லி கிராம நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சாம்பா பகுதியில் ஓர் ஆலயம் கட்டுவதற்கான நிலம் கிடைக்க; நமது விசுவாசிகளை விசுவாசத்தை விட்டு விலகச் சொல்லி மிரட்டிவரும் கிராமத் தலைவர்கள் இயேசுவின் அன்பைக் கண்டுக்கொள்ள; நம் விசுவாசி ஜோதியிடம் கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கையைக் கைவிடச் சொல்லி வலியுறுத்தும் அவரது சொந்த குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; சுங்வாலி பணித்தளத்தைச் சார்ந்த தர்செம் கல்லீரல் பிரச்சனையிலிருந்து சுகம் பெற; நேகாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; கிராம மக்கள் ஒருசிலரால் தவறாக வழிநடத்தப்படும் தியானி கிராம கமலேஷ் தேவியின் குடும்பத்தினர் கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தில் உறுதியாக இருக்க ஜெபிப்போம்.

உபவாசம் விடுவித்த சிறைவாசம்!

மத்தியப் பிரதேசம், நேப்பா நகர் பணித்தளம். பளசூர் கிராமத்தைச் சார்ந்த ஜானாபாய், 30 வயது நிரம்பியவர். கடந்த 15 ஆண்டுகளாய் இவர் பிசாசின் பிடியில் சிக்கி அவதிப்பட்டு வந்தார். இவர் 15 வயது நிரம்பியவராய் இருக்கும்போது, இவருக்கு திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் அந்த திருமணம் நடைபெறவில்லை. இதனால் கோபமடைந்த மணமகனின் வீட்டார் அசுத்த ஆவியை ஏவி இவரைச் சித்ரவதை செய்தனர். அப்பொழுதிருந்தே அந்த அசுத்த ஆவி இவரை அலைக்கழித்து வரவே, இவருக்கு விடுதலை பெற்றுத் தர இவரது குடும்பத்தினர் பலவிதங்களில் பிரயாசப்பட்டும், அனைத்தும் பிரயோஜன மற்று போயிற்று. எனவே, கடந்த ஒரு மாத காலமாக இவர்கள் நமது ஜெபக் கூட்டங்களில் வந்து பங்குப்பெற்றனர். சபையார் ஜானாபாயிற்காக ஜெபிக்கும் போது, சபை விசுவாசியொருவர் ஒரு தரிசனம் கண்டார். அதில் ஆண்டவர் ஜானாபாயின் பெற்றோரது வீட்டிற்குப் போய் உபவாசத்தோடு ஜெபிக்க ஏவினார். அவர்கள் அங்கு போய் ஜெபித்த போது, இவர் விடுதலை பெற்றார். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. தவ்ங் கான் கப் P.
திருமதி. குமாரி பாரதி பாருட் பிரதாப்

ஹிமாச்சலப் பிரதேசம்

ரிகாங்பியோ:

பப்லு பரசேத் & கல்பனா மாலிக்

துதிக்க: புதிதாக 14 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு, 2 பேர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 51 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 50 முழு வேதாகமப் புத்தகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதிக இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மன்குமாரிக்காக நமது மிஷனெரிகள் ஜெபித்தபோது, அவருக்குள்ளாக இருந்த தீய ஆவி வெளியேறி, அவர் பூரண சுகமடைந்துள்ளார். வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் 7 இடங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. ஆத்தும ஆதாயப் பயிற்சி, சபை மூப்பர்கள் பயிற்சி மற்றும் சிறிய குழுக்களுக்கான பயிற்சிக்கூடுகைகள் யாவும் சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளன. ஊழியப்பயணத்தின்போது, சிறிய குன்றொன்றிலிருந்து உருண்டு வந்த பெரிய கல்லின் மூலமாக ஏற்படவிருந்த பெரும் விபத்தினின்று நமது விசுவாசிகள் மற்றும் ஒரு சில மிஷனெரிகளின் பிள்ளைகளுடைய ஜீவன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. தீய சக்திகளின் பிடிகளிலிருந்து மக்கள் விடுபடுவதற்காக சிறந்ததொரு உபவாச ஜெபம் ஏறெடுத்து முடிக்க தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் சிறுவர் விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சிகள், வாலிபர், பெண்கள் மற்றும் தலைமைப் பொறுப்பிற்கான பயிற்சிகள் யாவற்றின் ஆசீர்வாதங்களுக்காக; நமது ஊழியத்தை எதிர்த்துவரும் ரிப்பா, மூராங், இந்தர் மற்றும் முன்னா ஆகியோர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து மன்குமாரி, பாண்டு, ராஜ்குமார் ஆகியோர் சுகமடைய ஜெபிப்போம்.

பஞ்சாப்

ஃபாசில்கா:

ஜெருயேல் பானி &
ஜியோட்ஸ்னா ராணி

துதிக்க: முதல்முறையாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு, 2 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களும் நடைபெற்றுள்ளன. சுபாஷ் காலில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றிலிருந்தும், சுகேந்திரனின் சகோதரர் தீய ஆவியின் பிடியிலிருந்தும் சுகவிடுதலை பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பின்மாற்றமடைந்திருக்கும் சந்தீப் சிங்கும், பிரேம் சிங்கும் மீண்டும் கிருபையாய் விசுவாச வாழ்வைப் பெற்றுக்கொள்ள; வியாதிப் படுக்கையிலிருக்கும் வீரோ ராணி மற்றும் மூட்டு வலிகளின் பிரச்சனையிலிருக்கும் மங்கத் ராம் பூரண சுகம் பெற; தீய ஆவியின் பிடியிலிருந்து சந்தீப் சிங் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கல்பனா மல்லிக் பப்லு

புத்லாடா: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

துதிக்க: புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 5 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மக்களிடையே பகிரப்பட்டுள்ளன. அதிகப்படியான இரத்த அழுத்தக் கோளாறினிமித்தம் ஏற்பட்ட பக்கவாதத்திலிருந்து ஜஷ்வந்த் கௌர் முழுசுகம் பெற்றுள்ளார். ஹர்பகவான் சிங் ஒரு பெரும் விபத்தினின்று காப்பாற்றப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பஃபாரா கிராமத்தில் இயேசுத் திரைப்பட ஊழியம் செய்வதற்கு இருக்கும் தடைகள் யாவும் விலகவும், அக்கிராம மக்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பூரண விடுதலை பெறவும்; சீமா கௌர் & மஸ்கான் குழந்தை பாக்கியமடைய; குருதீப் சிங்கும் சீமா கௌரும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; தரியாபூர் கிராம பிந்தர் கௌர் குடல் பிரச்சனையிலிருந்து சுகமடைய; அதிக காலமாகக் காத்திருக்கும் நமது விசுவாசிகளின் விசுவாசம் தொய்ந்துப் போகாதவண்ணம், அவர்களுக்கு நல்ல வாழ்க்கைதுணைகளும் தகுந்த வேலை வாய்ப்புகளும் கிடைக்க ஜெபிப்போம்.

பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்

துதிக்க: கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் புதிதாக 8 நபர்கள் அறிக்கை செய்துள்ளனர். ஜெபத்திற்குக் கிடைத்த நற்பதிலாக, நடக்கவும் உட்காரவும் இயலாமலிருந்த தர்செம் நன்கு சுகம் பெற்றுள்ளார். இங்கு நடைபெற்ற சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 150 சிறுவர்கள் பங்குப்பெற்று ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். தன் கணவனை இழந்ததினிமித்தம் அநேக நாட்களாகத் தூங்க முடியாமல் தவித்து வந்த ஜஸ்வீர் கௌர் ஜெபத்தின் மூலம் மனஆறுதல் பெற்று, சமாதானத்துடன் காணப்படுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: தனவ்லா கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாக நிற்க; தங்களது மகனை இழக்கக் கொடுத்திருக்கிறதினிமித்தம் மனஆறுதலற்று இருக்கும் அம்ரித்பால் சிங்கையும் அவரது குடும்பத்தினரையும் தேவன் ஆறுதல்படுத்த; கர்ப்பிணி பெண்ணான ககன்தீப் கௌர் மூலப்பிரச்சனையிலிருந்து சுகம் பெற்று, சுகப்பிரசவம் காண ஜெபிப்போம்.

நொடிப்பொழுதில்!

ஹரியானா, பர்வாலா பணித்தளம். சாகு கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி முனிஷ் தனது நண்பருடன் இணைந்து மின் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஏற்பட்ட மின்கோளாறினால் மின்சாரம் இருவரின் சரீரத்திலும் பாய்ந்தது. இதில் இவரது நண்பர் சம்பவ இடத்திலேயே மரித்துப்போனார். இவரும் மரித்துப்போனார் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால் சுயநினைவற்றிருந்த இவர், தேவ கிருபையால் சிறிது நேரம் கழித்து நொடிப்பொழுதில் மீண்டும் சுயநினைவடைந்தார். தேவனுக்கே மகிமை!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மங்கையர்க்கரசி பெஞ்சமின்

திருமதி. சுவிலா ஞானப்பூ டேனியல்

மான்சா:

தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

துதிக்க: புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறப்பாக நடந்தேறியுள்ளது. சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி எல்லாப் பணித்தளங்களிலும் நடைபெற்றதை முன்னிட்டு, அதில் கலந்துகொண்ட 120 சிறுவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். குறிப்பாக அந்த 120 சிறுவர்களில் 45 பேர் ஒரு புதிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள். புதிதாக வேதாகம வகுப்புக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. ஏழு நாட்களாக இருந்து வந்த கொடிய காய்ச்சலிலிருந்து குருசரண் அற்புத சுகம் பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: கய் கிராமத்தில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப்பணியில் இப்பணித்தள விசுவாசிகள் யாவரும் உற்சாகமாக ஈடுபட்டு, தங்களது உதவிகளை உதாரத்துவமாகச் செய்ய; 9 பேர் அடங்கிய நமது வெளிப்புற சந்திப்பு ஊழியக்குழுவினர் தீவிரமாக தேவராஜ்ய கட்டுமானப்பணியில் தங்களது பங்கைக் கையளிக்க; புதிய விசுவாசிகளின் இல்லங்களில் தெய்வீக சமாதானம் தங்கியிருக்க; நமது விசுவாசிகள் கிறிஸ்துவை அறிக்கை செய்வதில் தைரியமாகச் செயல்பட ஜெபிப்போம்.

அஹ்மத்கட் மண்டி:

சௌதரி ராஜேஷ் & சரிதா பால்; தீப்திலால் மாலி & ரேணுமா

துதிக்க: சுவிசேஷம் 650 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். 50 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்கள் புதிதாக சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 2 இடங்களில் நடத்தப்பட்ட சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் சுமார் 130 சிறுவர்கள் கலந்து கொண்டு ஆவிக்குரிய நன்மையைப் பெற்றுள்ளனர். சுவிசேஷக்குழுவினரும், நமது விசுவாசிகளும் புதிய மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பகருவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். பாம்புக் கடியிலிருந்து பிரிட்டோ கௌர் பாதுகாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடத்தத் தீர்மானித்திருக்கும் அனைத்துக் கூடுகைகளும், வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட; இப்பணித்தள திருச்சபை புதிய விசுவாசிகளினால் நிரம்பி வழிய; பிறந்து 12 நாட்களே ஆன தனது மகனை இழந்து தவிக்கும் பிரீத்தி கௌருக்கு நல்ல மனஆறுதல் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜோத்ஸ்னா தேவி பிரசாந்த்
திருமதி. மேஷ்ராம் கல்பனா வால்வி நேதாஜி

ஹரியானா

பர்வாலா:

மிண்டு குட்டும் & சுப்ராபாக்

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது; அதில் 10 நபர்கள் இயேசுவின் நாமத்தில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். மக்களுடைய ஆவிக்குரிய வாழ்வு மேம்பட 15 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 3 முழு வேதாகமப் புத்தகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியாக எதுவும் சாப்பிடவோ, குடிக்கவோ முடியாம லிருந்த சாகு கிராம திரிஷா தனது தொண்டைப்பிரச்சனையிலிருந்து முழுசுகம் பெற்றுள்ளார். குமார் இன மக்களிலிருந்து சில புதிய குடும்பங்கள் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதோடு, நமது ஆலய ஆராதனைகளிலும் அவர்கள் கிரம மாகப் பங்குப்பெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சானியானா கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டுவதற்கான நிலமொன்று வாங்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களில் காணப்படும் வாலிப வயதினர் குடி மற்றும் போதைப்பொருள் பழக்கங்களிலிருந்து விடுபடவும், ஒழுங்காக ஞாயிறு ஆராதனைகளில் பங்குப்பெறவும்; கர்காரா கிராம கமலுக்கு இருதய அறுவை சிகிட்சை செய்வதற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட; உக்குலுனா கிராம மம்தா, கய்பிபூர் கிராம வஜிந்தர், மாதா கிராம சந்தீப் மற்றும் பர்வாலா பகுதி பவன் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைதுணைகள் அமைய ஜெபிப்போம்.

தோஷம்:

ஜாண் டேவிட்சன்
செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: சிறுவர்கள் 7 கிராமங்களிலிருந்து வந்து அவர்களுக்கான விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளதோடு, தேவ வார்த்தையும் அவர்களது பிஞ்சு உள்ளங்களிலே ஜெபத்துடன் பதிக்கப்பட்டுள்ளது. 50 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 1 முழு வேதாகமப் புத்தகமும் பகிரப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜிந்த் கிராம விசுவாசிகள் நமது ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்துக் கொள்ள; சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் யாவரும் முழுமனதுடன் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பலவாஸ் கிராம சிண்டு, ஜகதீஸ் மற்றும் புளூ ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; இப்பணித்தளத்தில் பெரும் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; இணைய தள விளையாட்டுகளுக்கு அடிமையாகி, அதிகளவு பணம் இழக்குமளவிற்கு மெய்மறந்து சிக்கியிருக்கும் வாசு அதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுதாராணிபாய் ரவி

உத்தராகண்ட்

பஸ்பூர்:

கிறிஸ்டியன் பிரகாஷ் &
கோகனி சுமித்ராபேன்

துதிக்க: புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் வெளிப்படுத்தியுள்ளனர். சுவிசேஷ வசனங்களுக்கு 2 கிராமத்தினர் ஆர்வமாகச் செவிகொடுக்கின்றனர். இரவுநேர ஜெபக்கூடுகைகள் 3 இடங்களிலும், இயேசுத்திரைப்பட ஊழியம் 2 இடங்களிலும் சிறப்பாக நடந்துள்ளன. கல்லீரல் கோளாறிலிருந்தும், தலைவீக்கத்திலிருந்தும் பூஜா பூரண சுகம் பெற்றுள்ளார். குடிப்பழக்கத்திலிருந்து பல்வீந்தர் சிங் விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான கூடுகைகள் யாவும் இடையூறின்றி நடைபெற; நமது ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் கிறிஸ்துவின் தூய அன்பினால் தொடப்பட; கீதாவை சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், லக்கன் சிங்கைப் பக்கவாத நோயிலிருந்தும், காவியாவை காசநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; ராம்வதியை தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; சலோமிக்கு நல்ல ஆசீர்வாதமான குழந்தை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

மல்தன்சோர்:

ஷிஷு பால் & அனிதா

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 94 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும் 3 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. சோனா சிங் மற்றும் ஆயுஷ் ஜெபத்தின் மூலம் தைராய்டு பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றுள்ளனர். பாபுராம் மற்றும் பல்தேவ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிருமதாரா மற்றும் பத்ராம்பூர் ஆகிய இடங்களில் நமது ஊழியம் விரிவாக்கம் செய்யப்பட; வரும்நாட்களில் நடக்கவுள்ள பெண்கள் கூடுகை மற்றும் ஆத்தும ஆதாயக்கூடுகையாவும் சிறப்பாக நடைபெற; சிவ்நாத்பூர் மற்றும் நாராயண்பூர் பகுதிகளிலிருந்து நமக்குப் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; ஆகாஷ், அனுஜ், சங்கீதா, ரிஷிபால், பிரியா, காஜல் மற்றும் தாராவதி இரட்சிப்படைய; சிங்கு மனநோயிலிருந்து முற்றிலும் சுகம் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மோசஸ் முரளிதரன் S., திரு. நரேந்திர பஹதூர்

டெல்லி

பட்பர்கன்ஜ்:

P.G. கிறிஸ்டோபர் & மேபல்

துதிக்க: கரோலி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அங்கிருந்து புதிய விசுவாசிகள் 3 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 34 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 4 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. 12 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களும், 4 இடங்களில் வேதாகம வகுப்புகளும், 8 இடங்களில் உபவாச ஜெபங்களும் மற்றும் 4 இடங்களில் பெண்கள் கூடுகைகளும் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் 3 கிராமங்களில் நடைபெற்றதின் பொருட்டு, அதில் 110 சிறுவர்கள் கலந்து கொண்டு சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். கோவிட்-19னின் சூழ்நிலைக்குப்பிறகு 2 வருடங்கள் கழித்து, உதவியற்ற சிறுவர்களுக்குக் கல்விப்பயிற்சியைத் தொடங்குவதற்கு நமது மிஷனெரிகள் நல்ல ஆதரவாளர்களைப் பெற்று, அவர்கள் மூலம் அப்பிள்ளைகளுக்கு ஆங்கில மொழிப்பயிற்சியும், அவர்களது பற்பல திறன்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சியும் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். திரிலோக்புரி சபைப்பணிகளில் விக்கி தன்னார்வமாக உதவி செய்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கும் 60 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கையிட; டெல்லியின் துணை நகர்ப்புறப் பகுதிகளில் ஊழியம் செய்ய அதிகமான சுதேச ஊழியர்கள் முன்வர; கல்யாண்புரி மற்றும் சஜ்வான் நகர் பகுதிகளில் ஆராதனைகளை நடத்த நல்ல வாடகை அறைகள் கிடைக்க; பக்கவாதத்தினால் கஷ்டப்படும் மகேந்தர், தேவேந்தர், தவமணி, தைராய்டு மற்றும் வாதப்பிரச்சனைகளினால் அவதிப்படும் மாலிகா மற்றும் காசநோயினால் அல்லல்படும் ரவி, எலிசபெத் ஆகியோர் பூரண சுகம் பெற; குட்டி, ராணி, அனில், ரீனா, ராக்கி, ஷியாம் ஆகியோரின் குடும்ப உறவுகள் தேவ அன்பினால் மீண்டும் கட்டப்பட ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

கைர்த்தல்:

செல்வராஜ் & செல்வம்மாள்

துதிக்க: தீட்டா கிராமத்தில் சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம் தடையின்றி சுமூகமாக நடந்தேறியுள்ளது. இரவுநேர ஜெபக்கூடுகைகள் 13 இடங்களில் சிறப்பாக நடந்துள்ளன. 9 கிராமங்களில் சிறுவர் கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் பெரியவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டு, அதன்மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீட்டா மற்றும் மீர்காபஸ்ஸி கிராமங்களிலுள்ள வாலிபர்களும், பெரியவர்களும் அவர்களது கிராமங்களில் நடைபெறும் ஆத்தும ஆதாய ஊழிய நிகழ்ச்சிகளில் சந்தோஷமாக இணைந்துச் செயல்பட; தீர்னோலி கிராமத்திலிருந்து நமது ஆராதனைக்குப் புதிதாக வருகை தரும் 2 குடும்பத்தினர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; 3 விசுவாசிகளின் குடும்பங்கள் நமது இரவுநேர ஜெபக்கூடுகைகளில் தவறாது வந்து கலந்துக் கொள்ள ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆண்ட்ரூஸ் ஜவஹர்
திருமதி. ஹெப்சிபா ஆண்ட்ரூஸ்
திருமதி. மஹாலா ஷீலாபேன் பத்வி சோமாலியா

காஜுவாலா:

V. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

துதிக்க: தேவ கிருபையால் 3 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 5 நபர்கள் புதிதாக கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். பின்தொடர் ஊழியப்பணிகள் 5 கிராமங்களில் நன்கு நடந்தேறியுள்ளன. தனித்தாள் ஊழியம் மூலம் 5 நபர்கள் சந்திக்கப்பட்டு, அவர்களிடத்திலே தேவ அன்பு பகிரப்பட்டுள்ளது. கிறிஸ்துவை அறியாத குடும்பங்களிலுள்ள ஏராளமான சிறுவர்கள், தவணியா காலனியில் வைத்து நடைபெற்ற சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடக்கவுள்ள சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள், இரவுநேர ஜெபக்கூட்டங்கள், தனித்தாள் நற்செய்தி ஊழியங்கள், வேதாகம வகுப்பு ஊழியங்கள், பின்தொடர் ஊழியப்பணிகள், வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள், சிறுவர் வேதாகம வகுப்புகள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள் அனைத்தின்மீதும் தேவ ஆசீர்வாதம் நிறைவாய்க் காணப்பட; லவ்பிரீத்திற்கு நல்ல வேலையொன்று கிடைக்கவும், சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டும் அவரது வருங்கால துணை கிறிஸ்துவை முழுமையாய் ஏற்றுக்கொள்ளவும்; நமது மிஷனெரி தங்கியிருக்கும் வீட்டின் உரிமையாளர் சுக்தேவும் அவரது குடும்பமும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

அனுப்கார்:

பவுலஸ் பர்ஜோ &
பினிட்டா டொப்போ

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 28 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 4 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. 13 வேதாகம வகுப்புகள் முறைப்படி நடத்தப்பட்டுள்ளன. 4 இடங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகள் எவ்வித தடையுமின்றி நடந்தேறியுள்ளன. 10-ம் & 12-ம் வகுப்பு அரசுபொதுத்தேர்வுகள் எழுதியிருந்த நமது விசுவாசிகளின் பிள்ளைகள் யாவரும் நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சிப்பெற தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்தில் அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து இணைய; தனது கைகள் மற்றும் மார்பகப்பகுதிகளில் கொழுப்புக் கட்டிகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஜுப்பாபாய், மனநோயினால் அவதிப்படும் லாலா சிங், பித்தப்பை கல் பிரச்சனையினால் துன்புறும் வீர்பால் கௌர் மற்றும் விந்தர் கௌர் ஆகியோர் அற்புத சுகம் பெற; நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைதுணைகள் அமைய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜோஷஃபின் ஷீபா ஜீவானந்தன்

அஜீத்கார்:

ஜெய்பீர் சிங் & தேவி ராணி

துதிக்க: புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை 50 நபர்கள் மிகுந்த ஆவலுடன் வாங்கிச் சென்றுள்ளனர். பின்தொடர்பணி ஊழியங்கள், இரவுநேர ஜெபக்கூடுகைகள், வேதாகம வகுப்புக்குழுக்கள் யாவும் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளன. தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் வந்திருந்த கட்டிகளின்மீது எண்ணெய் பூசி ஜெபித்ததினால், லலிதேவி சுகம் பெற்றுள்ளார். அன்கித்திற்கு ஏற்பட்ட காய்ச்சலினால் இரத்த அணுக்களின் எண்ணிக்கை குறைந்தபோதிலும், அவரது தாயாரின் உபவாச ஜெபத்தின் மூலம் அந்த அணுக்களின் எண்ணிக்கை மீண்டும் கூடிவர தேவன் கிருபை செய்துள்ளார். ஜெய் என்ற 7 வயது சிறுவனுக்கு ஏற்பட்ட சிறுநீரக செயலிழப்பு பிரச்சனைக்காக அவனது தந்தை ஜெபித்த ஜெபத்தைக்கேட்டு, அறுவை சிகிட்சையின் மூலம் தேவன் அவனுக்குத் தந்துள்ள பூரண சுகத்திற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்த சிறுவர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் மூலம் அவர்களது குடும்பத்தினர் கர்த்தரை அறிந்து கொள்ளவும்; தீய ஆவியின் பிடியிலிருந்து புலிதேவி விடுபட; காவல்துறைப்பணிக்கு ஆயத்தமாகும் காஞ்சனா அதற்கான போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்று தேர்ந்தெடுக்கப்பட; பெண்ணிய பிரச்சனையிலிருந்து மஞ்சுதேவிக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

உத்தரப் பிரதேசம்

கோண்டா சிறுவர் விடுதி:

ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

துதிக்க: அரசு பொதுத்தேர்வுகளை எழுதிய நமது விடுதிப்பிள்ளைகள் அனைவரும் அதில் நற்தேர்ச்சிப் பெற்றுள்ளனர். நமது விடுதிக்கான தண்ணீர் அடிகுழாய் அமைக்கும் பணி சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விடுமுறை முடிந்து மீண்டும் விடுதிக்கு வந்துள்ள பிள்ளைகள் தங்களது படிப்பில் முனைந்து கவனம் செலுத்தவும், அவர்களது ஆவிக்குரிய வாழ்வு கர்த்தருக்குப் பிரியமாக மலரவும்; லக்னோ உயர் நீதிமன்றத்தில் நமது கோண்டா பணித்தள நிலத்தின் மீது நடத்தப்பட்டு வரும் வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்க; நட் மற்றும் காச்சி இனமக்கள்கூட்டங்கள் மத்தியில் திரளான ஆத்துமாக்கள் கர்த்தருக்கென அறுவடை செய்யப்பட ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சன்மதா மனோகர் தானே, திரு. ஓம்பிரகாஷ்

பர்த்தனா:

சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

துதிக்க: சுவிசேஷம் 8 கிராமங்களில் நற்செய்தியாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். 105 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 5 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. 22 இடங்களில் பின்தொடர் ஊழியப்பணிகளும், 4 இடங்களில் பெருமளவு வெளிப்புற சந்திப்பு ஊழியங்களும், 2 இடங்களில் சத்சங் நிகழ்ச்சிகளும் நல்லமுறையில் நடைபெற்றுள்ளன. 29 இடங்களில் சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் நடத்தப்பட்டு, அதன் மூலம் சுமார் 448 பிள்ளைகள் தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். சிறிய வேதாகம வகுப்புக்குழுக்கள் மற்றும் ஜெபக்குழுக்கள் சீராக நடைபெற்று வருகின்றன. 3 இடங்களில் நடந்துக் கொண்டிருந்த ஆழ்துளைக்கிணறு தோண்டும் பணிகள் யாவும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. விஜய் குமார் மற்றும் நமது விசுவாசியொருவர் பிரயாணம் செய்துக்கொண்டிருந்த ஆட்டோ குழிக்குள் விழுந்துவிட்டபோதும், அவர்களுக்கு எவ்வித காயமுமின்றி தேவன் அவர்களைப் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிள்ளைகள் யாவரும் தனிப்பட்டவிதங்களில் கர்த்தரை நன்கு அறிந்துகொள்ளவும், அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்டுள்ள வேத வசனங்கள் அதிகமான நற்பலன்களைத் தரவும்; நமது சுதேச ஊழியரின் மனைவி ஆர்த்தி பூஞ்சை தொற்றுநோய்க் கிருமியிலிருந்தும், மற்றொரு சுதேச ஊழியரான ஜெயகரனின் மனைவி ராதா தனது தலையில் ஏற்பட்டுள்ள காயத்திலிருந்தும், தேஜ் சிங் புற்றுநோயிலிருந்தும் மற்றும் ரீனா மூளை காசநோயிலிருந்தும் முழு ஆரோக்கியம் பெற; ஜக்ராமின் குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

ஜின்ஜக்:

சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

துதிக்க: தேவ கிருபையால் 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன் மூலம் 4 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து இணைந்துள்ளனர். 450 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும் 2 முழு வேதாகமப் புத்தகங்களும் பகிரப்பட்டுள்ளன. 22 கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் கிறிஸ்துவை அறியாத சிறுவர்கள் ஏராளமானோர் பங்குப்பெற்றுள்ளனர். பயங்கர கோர விபத்திலிருந்து ஆஷ்ராமின் மருமகன் காப்பாற்றப்பட்டுள்ளார். பாபன்பூர் மற்றும் படவால் திருச்சபை வளாகங்களுக்குள் 2 ஆழ்துளைக்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 3 இடங்களில் சத்சங் நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளன. கரியன்வாலா கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் புதிதாக நமது போலா நகர் சபை ஆராதனைக்கு வருகை தருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜோகி மற்றும் பஞ்சாரா சமாஜ் இனமக்கள் பெருமளவில் கிறிஸ்துவண்டை வர; தனது கணவரை சமீபக்காலத்தில் இழந்திருக்கும் காந்திக்கு மனஆறுதல் கிடைக்க; சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தின் மூலம் 800 சிறுவர்களைச் சந்திக்க வேண்டுமென தீர்மானித்திருக்கும் திட்டம் செயல்படுத்தப்பட; இந்நிதியாண்டில் 200 புதிய ஆத்துமாக்கள் அறுவடை செய்யப்பட; பித்தப்பை கல் பிரச்சனையிலிருந்து ராணிக்கும், மனவளர்ச்சியின்மை கோளாறிலிருந்து பூஜாவிற்கும் சுகம் கிடைக்க ஜெபிப்போம்.



மத்தியப் பிரதேசம்

டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

துதிக்க: ஒரு கிராமத்தில் தேவ அன்பைக் குறித்து சொன்னபோது, அங்கிருந்த ஏறத்தாழ 250 நபர்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். 400 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், ஒரு முழு வேதாகமப் புத்தகமும் கொடுக்கப்பட்டுள்ளன. விஷால் பாதம் மற்றும் அவரது மனைவி கர்த்தருக்குச் சேவை செய்வதற்கென தங்களது வாழ்வை அர்ப்பணித்துள்ளனர். அங்கு நடந்த தேர்தல் சமயத்திலும் நமது ஊழியத்திற்கு எந்த தடையும் ஏற்படாதபடி தேவன் காத்து நடத்தியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: தய் மற்றும் சுல்தான்பூர் பகுதி விசுவாசிகள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் புதுப்பித்துக்கொள்ள; சந்தோஷ் மற்றும் அவரது மனைவி தங்களது வாழ்வைக் கர்த்தருடைய பணிக்கென அர்ப்பணிக்க; திருமணமாகிக் கடந்த 9 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாதிருக்கும் தீபக் மற்றும் அவரது மனைவிக்கு தேவன் அப்பாக்கியத்தை அருள; பிரேம் நகரில் நடைபெற்றுவரும் ஆழ்துளைக்கிணறு தோண்டும் பணி மற்றும் ஆலயக்கட்டு மானப்பணிகள் யாவும் கடும் மழையினால் பாதிக்கப்படாமலிருக்க ஜெபிப்போம்.

பன்சேமால்: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

துதிக்க: புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. 12 இடங்களில் நடத்தப்பட்டுள்ள சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தின் மூலம் 512 பிள்ளைகள் ஆவிக்குரிய பயன்பெற்றுள்ளனர். மந்தினி கிராமத்திலிருந்து 28 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுமித்தியா தாதாவின் முதுகுத்தண்டுவடத்தில் காணப்பட்ட கட்டி ஜெப எண்ணெயைப்பூசி ஜெபித்ததின் விளைவாக, கரைந்து காணாமல் போயுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: கடியா, சாப்கட்கி, உம்பர்வேதா, கவ்டி மற்றும் தீம்லா ஆகிய கிராமங்களில் வசிக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந் திரும்ப; சிறுநீரகக்கோளாறினால் பாதிக்கப் பட்டு மரிக்கும் தருவாயிலிருக்கும் ஜெகரியா தாதா அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

எதிர்ப்போரும் வசமாவர்!

மத்தியப் பிரதேசம், பன்சேமால் பணித்தளம். கட்டியா கிராமத்தில் வசித்து வந்த நமது சுவிசேஷ எதிர்ப்பாளர் சோமிபாய் மூளைக்கட்டியினால் பாதிக்கப்பட்டு, அதிக சிரமத்திற்குள்ளானார். சிகிட்சையளித்த மருத்துவர்களும் அவரைக் கைவிட்டு விட்டதினால், அவரை அவரது குடும்பத்தினர் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு வந்து விட்டனர். அவரது உறவினர்கள் அவருக்கு இறுதி மரியாதைக்கான காரியங்களையும் செய்ய ஆரம்பித்து விட்டனர். ஆனால், அவரது மகளோ நமது சுதேச ஊழியரை அழைத்து, தனது தகப்பனாருக்காக ஜெபிக்கும்படி கேட்டார். நமது சுதேச ஊழியரும் பிற விசுவாசிகளுடன் சேர்ந்து, அந்த நாள் இரவு முழுவதும் சோமிபாயிற்காக ஜெபித்தார். அதன் பொருட்டு, கர்த்தர் சோமிபாயிற்கு ஜீவனருளினார். உடனே சோமிபாய் எழுந்து, தனக்கு மீண்டும் ஜீவன் தந்த கர்த்தருக்குச் சாட்சிக் கூறினார். இதனால் சோமிபாயும், அவரது குடும்பத்தாரும் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கர்த்தருக்கே மகிமை!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜோதி மேரி ஹெலன் மம்குந்தா
திரு. மத்தியாஸ் மால்தோ

பால்: மகேந்திரன் & புஷ்பம்

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவை அன்பிற்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். 2 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. ஜெபத்திற்குக் கிடைத்த பலனாக, ராஜுவிற்கு விவசாயம் செய்வதற்கு தேவையான 8 ஏக்கர் நிலப்பகுதியை வாங்க தேவன் உதவி பாராட்டியுள்ளார். அஞ்சலி கையெலும்பு முறிவிலிருந்தும், முனிபேன் சரீரக்கட்டிகளிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். 3 நாட்களாகக் காணாமல் போயிருந்த ரீனாபாயின் ஆடு ஜெபத்தின் மூலம் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அம்பானி கிராம விசுவாசிகளை ஆராதிக்க விடாமல் தடுக்கும் வனத்துறை அதிகாரி மனந்திரும்ப; வலது கால் பாதத்திலிருக்கும் கட்டியிலிருந்து அர்ஜுன் குணமடைய; வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சகியா தேவ் கிராமத்தினருக்கு வீட்டு பட்டாக்கள் கிடைக்க ஜெபிப்போம்.

கால்வா:

பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா பர்தன்

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 25 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 41 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 2 கிராமங்களில் பின்தொடர் ஊழியப்பணிகள் நடைபெற்றதில், சுமார் 80 நபர்கள் சுவிசேஷத்திற்குச் செவிமடுக்க ஆரம்பித்துள்ளனர். சர்கேதா, பாடா, மோகோலா, தகட்குட் பிட்ச் ஆகிய கிராமங்களில் எதிர்ப்புகளின் மத்தியிலும் வெளிப்புற சந்திப்பு ஊழியம் சிறப்பாக நடந்தேறியுள்ளது. கால்வா சிற்றாலயத்தில் வைத்து நடத்திய 2 நாட்கள் சிறப்பு ஆவிக்குரிய கூடுகைகளில் 100 பேர் கலந்து கொண்டு, தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். தகட்குட் கிராமத்தில் சிறிய ஜெபக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. கருப்பைக்கட்டி பிரச்சனையிலிருந்து ஊர்மிளா சுகம் பெற்றுள்ளார். தங்களது வீட்டில் ஜெபக்கூட்டம் ஆரம்பித்ததின் விளைவாக, சாரதா தீய ஆவியின் பிடியிலிருந்தும் அவரது கணவர் குடிப்பழக்கத்திலிருந்தும் விடுபட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக்குழுக்கள் சீராக இயங்க; வரும் நாட்களில் நடக்கவிருக்கும் ஊழியக் கூடுகைகள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் யாவும் ஆசீர்வாதமாக நடைபெற; சிக்தாலி மற்றும் ஜம்தாத் கிராமங்களில் இவ்வருடத்திற்குள் ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட; பர்மிளா மார்பகப் புற்றுநோயிலிருந்தும், ஜவோலா பாபா மற்றும் மன்ஷாராம் பக்கவாதத்திலிருந்தும் சுகம் பெற; பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து சங்கீதாவும், ராதாபாயும் விடுதலை பெற; ராதாஷியாம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஞானசேகரி ஜாண் டேவிட்

திரு. அசோக் நாயக்

தூல்கோட்:

ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

துதிக்க: சுவிசேஷம் 4 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. 11 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சிறுவர் கூடுகைகளும், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. 6 மாத கர்ப்பிணியான கரீனாவிற்கு திடீரென ஏற்பட்ட இரத்தப்போக்கு பிரச்சனைக்காக அங்கிருந்த விசுவாசிகள் கூடி உபவாசித்து ஜெபித்தபோது, அவர் அற்புத சுகம் பெற்றுள்ளார். மனிஷ் உபவாச ஜெபத்தின் போது, வலிப்புநோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். விஷப்பாம்பின் கடியினால் வாந்தி மற்றும் தலைச்சுற்றினால் கஷ்டப்பட்ட கானாமிங் ஜெபத்தின் மூலம் சுக மடைந்துள்ளார். பசாலி கிராம நன்லா 5 வருடங்களாக புத்தி சுயாதீனம் இழந்த நிலையில் தீய ஆவியினால் கட்டப்பட்டிருந்த பிடியிலிருந்து விடுதலை யடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கடி, சமேலி, பவ்தி, காளிகிராத், சிந்கேடா, ரெங்கா, ஜெட்லி, பிலோடி, அம்பா காலனி ஆகியப்பகுதிகளில் பல்வேறு காரணங்களினால் தடைபட்டு நிற்கும் ஆவிக்குரிய கூடுகைகள் மீண்டும் தொடங்கப்பட; விசுவாசிகளைப் பிரித்துக்கொண்டுபோய் ஊழியங்களுக்கு இடையூறு செய்யும் நமது முன்னாள் சுதேச ஊழியர் மனந்திரும்ப; கௌட்டி திருச்சபையில் மீண்டும் ஆராதனை ஆரம்பிக்கப்பட; பில்லி சூனிய மந்திரப் பயிற்சி செய்யும் ராகாபாய் & ஜுக்லிபாய் மற்றும் தனசிங் & காலுமாதா ஆகியோரை தேவன் தொட; சோட்டிபாய், அமலியப்பன், தெகுமன்யா மற்றும் பிப்பல்யா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; தான் புத்தி தெளிவற்ற நிலையிருப்பதினால், தனது குழந்தைக்குப் பால் கொடுக்க மறுக்கும் லூடிபாய் பூரண சுகமடைய; பயத்தின் ஆவியிலிருந்து நமது சபை மூப்பரான சுபாசிங் விடுதலை பெற ஜெபிப்போம்.

பீஹார்

ராணிகன்ஜ்: ஜாண் & செலினா

துதிக்க: மகிஷி மற்றும் தம்சாய்னா கிராமங்களில் ஞாயிறு ஆலய ஆராதனைகள் தொடங்கப்பட்டுள்ளன. கோவிந்தபூர் கிராமத்தில் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 5 கிராமங்களில் பின்தொடர் ஊழியப்பணிகள் நடந்தேறியுள்ளன. கண்டுபிடிக்க முடியாத வியாதியிலிருந்து பரதேசி பிண்டு அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்கும்வண்ணமாக பீட்டாய் கிராமத்தில் சுவிசேஷத்தைப் பகர்ந்து வரும் நமது புதிய விசுவாசி பூஜா தேவிக்காக; கோவிந்தபூர் கிராமத்திலிருந்து நமது ஆராதனையில் புதிதாக வந்து கலந்து கொள்ளும் 3 குடும்பத்தினர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய; பிஜய் மகத்தோவின் நிலப்பிரச்சனை முடிவுக்கு வர; படகு மூலம் கோஷ் நதியைக் கடந்து ஊழியத்திற்குச் செல்லும் நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியரின் பிரயாணப் பாதுகாப்பிற்காக; வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் நமது மிஷனெரிக்கு உதவி செய்துவரும் தீப் நாராயண் மற்றும் மித்லேஷின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சார்லஸ் செல்லகுமார்
திரு. துருபராஜ் பெபர்த்தா
திருமதி. சோஃபியா டேனியல் ராஜாமணி

ஜார்க்கண்ட்

கிழக்குப் பிராந்திய மேம்பாட்டுப்பணி:

ஜாண்சன் ராஜதுரை & வினோதினி

துதிக்க: பல்வேறு பெலவீனங்களிலிருந்தும் மற்றும் பலவித பூச்சித் தொல்லைகளி லிருந்தும் நமது விடுதிப்பிள்ளைகள் தேவ கிருபையால் இம்மட்டும் பாது காக்கப்பட்டுள்ளனர். கிராம சிறுவர் கல்வித்திட்ட நிகழ்ச்சிகள் 16 கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளன. 28 வாலிபர்கள் பயன்பெறும்வண்ணம் முதியோர் கல்வித் திட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளதற் காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஏற்கனவே 16 கிராமங்களில் நடந்து முடிந்துள்ள சிறுவர் கல்வித்திட்ட நிகழ்ச்சிக்கு அடுத்தக்கட்ட சிறுவர்களைச் சேர்க்கும் பணி சிறப்பாக நடந்தேற; வேதாகமப் புத்தகங்களும், பாடல் புத்தகங்களும் விநியோகிக்கப்படும் நோக்கம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட; மழலையர் மற்றும் 1-ம் வகுப்பு நிலைகளில் சேரும் பிள்ளைகளுக்கு 10 மாதத்திற்குள் மால்தோ, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகள் கற்றுத்தரப்பட; இத்தகைய கல்விப்பயிற்சியின் மூலம் 3 வருடத் திற்குள் 3000 பிள்ளைகள் பயன்பெற; குடிக்கு அடிமையாகியுள்ளோருக்கு அதி லிருந்து வெளிவருவதற்கான தகுந்த பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட; விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், பற்பல திறன்வளர்ச்சிக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், மூங்கில் வியாபாரத்திற் கான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 10-ம் & 12-ம் வகுப்பு முடித்திருக்கும் வாலிபர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் யாவும் வெற்றிகர மாக நடத்தப்பட; தங்களது கணவன் மார்களை இழந்திருக்கும் 2000 மால்தோ விதவைப்பெண்களின் வாழ்வாதார தேவைக்கேற்ப ஆடு, கோழி, கால் நடைப் பிராணிகள் மற்றும் பன்றிகள் வாங்கி வளர்ப்பதற்கான உதவிகள் யாவும் அவர்களுக்குச் செய்துதரப்பட; இயேசுத்திரைப்பட ஊழியம் மற்றும் 600 கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கேற்ற பொருட்கள் மற்றும் அவ்வூழியங்களைச் செய்வதற்கேற்ற வாஞ்சையுள்ள ஒரு குழுவினரையும் தேவன் ஆயத்தப்படுத்தித் தர; அரசாங்க வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களை அங்குள்ள ராஜ்மஹால் பகடியா விகாஸ் சமிதி நேர்மையுடன் மக்களுக்கு அறிமுகப்படுத்த; விவசாயத்திற்கான கையேடுகள், சுவரொட்டிகள், வீடியோக்கள் மற்றும் பின்தொடர் பணிக்கான உபயோகப்பொருட்கள் யாவும் மால்தோ மொழியில் வெளிவர எடுக்கும் முயற்சிப் பணிகளுக்காக; இவ்வாறு ராஜ்மஹால் மலைவாசிகளான மால்தோ மக்களின் வாழ்வாதாரம் தழைக்க எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் பலமடங்கு நன்மை களாக வாய்க்க; சிறிய அளவிலான தொழில்வர்த்தகங்களின் மூலம் செய்யப்படும் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் வியாபாரப் பொருட்களில் நல்ல வருமானம் கிடைக்க; இயற்கை வள மேம்பாட்டுத் திட்டங்களாகிய நில மேம்பாடு, குடிநீர் திட்டங்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் அமைத்தல் போன்றவைகளில் நமது விசுவாசிகளுக்குப் போதுமான ஆதரவுகளை அரசாங்கம் காண்பிக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபா ஆல்பர்ட்
திருமதி. ஜான்சி ராபின்சன்
திருமதி. மேக்தலின் கிரேஸ் ஜசக்
திருமதி. துலந்தி ரியாங் நாபா சிங்

மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

துதிக்க: சுவிசேஷம் 8 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 6 புதியவர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் 16 இடங்களில் நடத்தப் பட்டுள்ளன. சபை மூப்பர்கள் மற்றும் வாலிபர்களுக்கான கூடுகைகள், சிறியளவிலான கூட்டங்கள், மேலும் பல ஊழிய நிகழ்ச்சிகள் அனைத்தும் எவ்வித தடங்கலுமின்றி நடந்தேறியுள்ளன. தாவுத் மரையா குடும்பம் கிறிஸ்துவை அறியாத அநேகரைத் தங்களது வீட்டில் கூட்டி, அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். பாம்புக்கடியிலிருந்து தலாகுரி பெஸ்ரா காப்பாற்றப்பட்டுள்ளார். கர்ப்பிணி பெண்ணான ரீனாகௌருக்கு பிரசவநேரத்தில் அதிகமான இரத்த அழுத்தம் ஏற்பட்டதினால், அங்கிருந்த செவிலியர்கள் கரடுமுரடான பாதை வழியே 60 கி.மீ.-க்கு அப்பால் இருக்கும் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல அறிவுறுத்தியபோதிலும், விசுவாசிகளின் ஜெபம் கேட்கப்பட்டு, எந்த பிற மருத்துவ மனைக்கும் அழைத்துச் செல்லப்படாம லேயே அவர் சுகப்பிரசவத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: மது காய்ச்சும் தொழில் செய்துவரும் மார்களின் குடும்பம் மனந்திரும்ப; 3 மாதங்களுக்கு முன்பு தனது மனைவியை இழந்திருக்கும் ராஜேஷிற்கு மனஆறுதல் கிடைக்கவும், அவரது மூளைப்பகுதியில் ஏற்பட்டிருக்கும் இரத்த உறைவினால் அவருக்கு இருக்கும் மன உளைச்சலிலிருந்து அவர் பூரண சுகம் பெறவும்; தப்ரா கிராம நிர்மல் முர்மு காசநோய் மற்றும் நீரிழிவுப்பிரச்சனையிலிருந்து முற்றிலு மாய்ச் சுகமடைய; தினேஷ் சந்திரா ஹெம்ரோம் தனது தீய நண்பர்களின் சகவாசத்திலிருந்தும், குடிப்பழக்கத் திலிருந்தும் விடுதலை பெற ஜெபிப்போம்.

லால்மட்டியா: அமரேந்திரன் & சுவேதா

துதிக்க: கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் புதிதாக 5 நபர்கள் அடியெடுத்து வைத்துள்ளனர். திடீரென செயலிழந்த தனது கைப்பிரச்சனை யிலிருந்து சோட்டிராய் டுடு அற்புத சுகம் பெற்றுள்ளார். நமது ஊழியங்களில் தன்னார்வமாக உதவி செய்ய ஒரு குடும்பம் முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்தில் நமது ஊழியங்கள் நடைபெறும் எல்லாக் கிராமங்களிலும் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளுக்கு இருக்கும் தடைகள் நீங்க; முதுகை நிமிர்த்த முடியாமல் தவிக்கும் பபிதாவின் தாயார் பூரண சுக மடைய; அநேக நாட்களாக இருந்துவந்த காயத்திலிருந்து அற்புத சுகம் பெற்ற தலா டுடு தைரியமாக தன் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; 9 மாதங்களாக காலெலும்பு முறிவு வேதனையில் கஷ்டப்பட்டு வரும் சஞ்சிலிக்கு 'இயேசு சுகம் தருவார்' என்ற நம்பிக்கை இருக்கின்ற போதிலும், அவர் தங்கியிருக்கும் அவரது வீட்டின் உறவினர்கள் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அவருக்கு இருக்கும் தடைகள் யாவும் விலக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மேரி செபாஸ்டின்

தீன்பஹாட் & பகையா:

ஜெபக்குமார் & பொன்லதா; நெகேமியா & அனாமிகா பெகு

துதிக்க: மசுரியா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசியான நிரஞ்சன் கல்கோ 3-வது முழுநேர மிஷனெரியாக இப்பணித்தளத் திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். நமது சுதேச ஊழியரான ஆல்பர்ட் குஜூர் தனக்குச் செய்யப்பட்ட குடலிறக்க அறுவை சிகிட்சை பெலவீனத்திலிருந்து சற்று சுக மாகி வருகிறார். கொரோனாவினிமித்தமாக தங்களது படிப்பைப் பாதியில் விட்டுச் சென்ற பிள்ளைகள் மீண்டும் தங்களது படிப்பைத் தொடர ஆரம்பித்துள்ளனர். சௌரி திருச்சபையினர் தங்களது ஆலயத்திற்குச் செல்ல சரியான பாதையில்லாமல் கஷ்டப்பட்டபோது, அவர்கள் அதற்காக அதிகம் ஜெபித்து வந்த நிலையில், அநேக நாட்களாக அந்நில உரிமையாளர் ஆல்பர்ட் குஜூருக்கும் அவருடைய சகோதரருக்கும் இடையே இருந்து வந்த பிரச்சனையில் தற்போது சுமூகமான தீர்வு எடுக்கப்பட்டு, சீரான பாதை கிடைத்துள்ளது. மசுரியா, பத்தாலா, குருபட்டி மற்றும் பய்சே ஆகிய கிராமங்களில் ஆலயங்களைக் கட்டுவதற்கு விசுவாசிகளே முன் வந்துள்ளனர். மகதோ, முசாஹர், முண்டா, தாஸ் இனமக்கள் சுவிசேஷத் திற்குச் செவிசாய்த்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுதேச ஊழியரான ஆல்பர்ட் குஜூர் தனது பெலவீனத்திலிருந்து விரைவில் நன்கு சுகமாகி, தனது ஊழியத்தை உற்சாகமாகச் செய்ய; மதன்சாகி கிராம ஆலயக்கட்டுமானப்பணி துரிதமாக முடிவடைந்து, அவ்வாலயம் தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட; நவ ஜீவன் சேவா மண்டல் விடுதிகளில் தங்கி, அரசுப்பள்ளிகளில் படித்துவரும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு நல்ல தரமான கல்வி கிடைக்க; முழுநேர ஊழியப்பணிக்கென தங்களை அர்ப்பணித்திருக்கும் ராஜேந்திர சிஸ்புட்டா, ரவிந்தர் குஜூர், சுக்தேவ் தீர்கி, ராம் எக்கா, ராஜேஷ் லக்தா, சுனில் குமார் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

அறிக்கை செய்ய மறுப்போரும் அறிக்கை செய்திடுவர்!

ஜார்க்கண்ட், மண்டரோ பணித்தளத்திலுள்ள இட்டஹாரி கிராமத்தைச் சார்ந்த துலாரி குமாரி மற்றும் சோனி குமாரி திடீரென மனநிலை பாதிப்பிற்குள்ளாகினர். அவர்கள் இருவரும் சபை மூப்பர் மற்றும் சுதேச ஊழியர்களிடம் ஜெபத் திற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். ஜெபிக்கும் வேளையில், நமது சுதேச ஊழியர் அவ்விரு பெண்களையும் "இயேசுவே, எங்களைச் சுக மாக்கும்!" என்று சொல்ல கேட்டுக்கொண்டார். அதில் ஒரு பெண் தன் வாயைத் திறக்கவே இல்லை; மற்றொரு பெண் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். எனவே, நமது சுதேச ஊழியர் இன்னும் ஊக்கமாய் பல மணிநேரம் அவர்களுக்காக ஜெபித்தபோது, அவ்விருவரும் சோர்புற்று மயங்கி விழுந்தனர். பின்பு அவர்கள் கண்விழித்தபோது, பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிருந்தனர். இப்பொழுது அவர்களது முழுக்குடும்பமும் தேவனை நம்பி, நமது சபை ஆராதனைகளில் கலந்து கொள்கின்றனர். அதிவிரைவில் இவர்கள் யாவரும் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்து, தேவ மந்தையில் சேர்க்கப்பட ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நிகய் தியான்சிங் ஜங்கோலுன்

கதுவா & சந்தால் தலைமைத்துவப் பயிற்சி மையம்:

சுந்தர் துரை & மெல்பின் ரெஜினி

துதிக்க: கடந்த மாதத்தில் 5 கிராமங்களில் சுவிசேஷப்பணி செய்ய தேவன் நமது மிஷனெரிகளுக்கு கிருபை செய்துள்ளார். 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 5 முழு வேதாகமப் புத்தகங்கள் பகிரப்பட்டுள்ளன. நவ ஜீவன் சேவா மண்டல் மூலம் ரேஷன் பொருட்களை 80 விசுவாசிகள் பெற்று பயனடைந்துள்ளனர். நடந்து முடிந்த மேளாவில் சுமார் 800 விசுவாசிகள் கலந்து கொண்டு, அம்மேளாவிற்கான செலவைச் சந்திக்கும்படி அவ்விசுவாசிகளே ரூ.40,000/- காணிக்கையாகக் கொடுத்துள்ளனர். சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தின் மூலம் கிட்டத்தட்ட 7000 பிள்ளைகள் முதன்முதலாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். 2 நாட்களாக நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகையில் 250 விசுவாசிகள் கூடி ஜெபித்துள்ளனர். 72 பெரியவர்கள் முதியோர் கல்வித் திட்டத்தில் இணைந்துள்ளனர்; அதில் 17 பேர் தங்கள் வாழ்க்கையில் ஒருமுறைகூட பள்ளிக்கூட அனுபவமில்லாதவர்கள். திடீரென கீழே விழுந்து கண்பார்வையை இழந்த பிரேம்லதா ஹன்ஸ்தக்கின் கண்ணீரின் ஜெபத்தைக் கண்ட தேவன், அவருக்குப் பூரண சுகம் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: மாரடைப்பினால் மரித்துப்போன நமது சுதேச ஊழியரான லாசர் முர்முவின் குடும்பத்தார் மன ஆறுதல் அடைய; குடலிறக்கப்பிரச்சனையிலிருந்து நமது சுதேச ஊழியரான தீமோத்தி மால்தோ சுகமடைய; வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது விசுவாசிகள் சுகம் பெற; தனது ஒரு காலை இழந்திருக்கும் நமது புதிய விசுவாசி அனில் பஸ்கி சிறிய கடைவியாபாரத்தின் மூலம் தனது வாழ்வாதார தேவைகளைச் சந்திக்க எடுக்கும் அவரது முயற்சியை தேவன் கனம் பண்ண ஜெபிப்போம்.

மேற்கு வங்காளம்

ஹல்திபாரி:

அனில் குமார் பிசோயி & ஆலிஸ்

துதிக்க: புதிதாக 4 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பகரப்பட்டுள்ளது. 5 கிராமங்களில் பின்தொடர் ஊழியப் பணிகள் சிறப்பாக நடந்தேறியுள்ளன. 30 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல், அவரை வெறுமனே தெய்வமாக நம்பும் ராஜ்போன்ஷி இனமக்களின் இரட்சிப்பிற்காக; பின்தொடர்பணி ஊழியங்கள் நடைபெற்றிருக்கும் கிராமங்களிலுள்ள மக்கள் யாவரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; மக்களை வசீகரித்து வைத்திருக்கும் பல தெய்வ வழிபாட்டு ஸ்தல தீயசக்திகளிடமிருந்து அவர்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கீதா கென்னத்
திருமதி. மெல்பின் ரெஜினி சுந்தர்
திரு. அகிலேஷ் குமார்
செல்வி. மேரி நெங்நெய்கிம் கோங்சய்

இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதின் பொருட்டு, 118 நபர்கள் சுவிசேஷத்தை முதல்முறையாக அறிந்திருப்பதோடு, அதிலிருந்து 14 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 2 புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. இரத்த வாந்தி பிரச்சனையிலிருந்து அஞ்சலி ஹன்ஸ்தக் சுகம் பெற்றுள்ளார். இப் பணித்தள ஊழியத்திற்கென புதியதொரு சுதேச ஊழியர் மற்றும் புதியதொரு மிஷனெரிக் குடும்பம் வந்து சேர்ந்திருப் பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது புதிய விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இயேசுவை அவர்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அவர்களையும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் கொணரவும்; பஹா சோரேன் மற்றும் பிசோத் மர்தி பக்கவாதத்திலிருந்து சுக மடைய; மோனிகா சோரேன், சிரு சோரேன், ராஞ்சில் சோரேன், லுக்கி முர்மு, அர்ஜுன் மர்தி மற்றும் சஞ்ஜய் மர்தி ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தலைவர்கள் மத்தியில் சிறிய அளவிலான ஜெபக்குழுக்கள் சீராக இயங்கவும், அவர்கள் அநேகருக்குச் சாட்சியாக விளங்கவும் ஜெபிப்போம்.

சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

துதிக்க: பெரியளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் 9 கிராமங் களில் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளன. 28 கிராமங்களில் சுவிசேஷ வசனம் உரைக்கப்பட்டுள்ளது. 2 இடங்களில் புதிய ஜெபக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. விசுவாசிகள் முகாம், சிறிய ஜெபக் குழுக்கள், தனித்தனியே சுதேச ஊழியர்கள் மற்றும் வாலிபர்களுக்கான வேதாகம வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. நமது விசுவாசிகளின் பிள்ளைகளான சாமுவேல் மற்றும் சோனாவிற்கு இலவசமாக 11-ம் & 12-ம் வகுப்புகளைப் படிப்பதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன. 2 நாட்களாகக் காணாமற் போயிருந்த ஜும்ரி மராண்டியின் 4 ஆடுகள் ஜெபத்தின் மூலம் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளன. 7 வருடங்களாக விடாது ஜெபித்து வந்த ஜெபத்தின் பலனாக, லுப்பவுங் கிராமத்தில் சுவிசேஷத்திற் கான வாசல் திறக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கும் ஜமால்பூர் கிராமத்தைச் சார்ந்த சுதா, பட்கு மராண்டி மற்றும் துளசி மராண்டி ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; மழைக் காலங்களில் ஆராதிப்பதற்குப் பெரும் சவாலாகக் காணப்படும் வாரி பகுதியில் விரைவாக ஒரு ஆலயம் கட்டப்பட; பீகாரின் எல்லைப்பகுதிகளில் இயேசுத்திரைப்பட ஊழியத்தை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் யாவும் செயல்பாட்டிற்கு வர; ஜித்தல்பூர் கிராம நமது புதிய தொடர்பாளரான சஞ்சலி சோரேனின் குடும்பத்தார் மூலம் அக்கிராமத்தில் ஆராதனைக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. குமாரி சுசம்மா ஹரமோகன்

திருமதி. சுஷ்மிதா சமரேந்திர சிங்

தபன்:
ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

துதிக்க: ஒரு கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. 2 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களும், 3 இடங்களில் இயேசுத் திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. இங்கு நடத்தப்பட்ட சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 75 சிறுவர்கள் பங்கேற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். பிரசவத்தின்போது ஏற்பட்ட அதிக இரத்த இழப்பினிமித்தம் மரிக்கும் தருவாய்க்குச் சென்ற ரீனா சோரேனின் ஜீவன் அற்புதமாகக் காக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நுருல், தபன், நெகெம்பா ஆகிய கிராமங்களைச் சார்ந்த மாலின் டுடு, ஜித்தா சோரேன், சஞ்ஜித் சோரேன், சிப்லால் சோரேன், சாம் சோரேன், சோனத்தான் டுடு, சுஜால் டுடு, சுதிர் சோரேன் ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய; பஸ்பாடா கிராமத்தில் சிறியதொரு ஆலயம் கட்டப்படவும், நுருல் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நிறைவடையவும்; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள், பெரியளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள், விசுவாசிகள் முகாம் மற்றும் வீடுகள்தோறும் ஜெபக் கூட்டங்கள் ஆகியவை யாவும் நல்ல முறையில் நடந்து முடிய; தரியூத் மர்தி கண் வீக்கத்திலிருந்தும், ரஜினா மர்தி வலிப்பு நோயிலிருந்தும், லோதிகா சோரேன் 12 வருடங்களாக இருந்துவரும் கண் தொற்றுநோய்க்கிருமி பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற; தீய ஆவியின் பயத்திலிருந்து தபு சோரேன் வெளிவர; மகிபூர் கிராமத்தில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் உருவாக ஜெபிப்போம்.

கங்காராம்பூர்: தீஹே & சரணி

துதிக்க: முதல்முறையாக 4 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நடைபெற்றுள்ளன; அதன் விளைவாக 12 நபர்கள் கிறிஸ்துவின் அடியவர்கள் ஆகியுள்ளனர். 9 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 3 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. 11 இடங்களில் இரவுநேர வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. 3 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு விருப்பத்துடன் செவிசாய்க்கின்றனர். நடத்தப்பட்ட ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாமில் கலந்துகொண்ட 26 பேரில் 20 பேர் ஜெபிப்பதற்கும், மற்றவர்களைக் கிறிஸ்துவண்டை நடத்துவதற்கும் தங்களை அர்ப்பணித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசிகளான சாம் சோரேன், செந்து சோரேன், மோஹ்லால் டுடுவின் குடும்பங்கள் கிறிஸ்துவில் நன்கு வளர; பனபகுர் கிராமத்தில் சிறியதொரு ஆலயம் கட்டப்பட; நமது விசுவாசிகள் அவர்களது உற்றார் உறவினர்கள் முன்பு நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இஸ்ரேல் டேனியல் P.
திரு. இம்மானுவேல் மூர்மு
திருமதி. நீருபேன் சோமாபாய்

அஸோம்

ஜோனை:

சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

துதிக்க: தேவ வார்த்தை சுவிசேஷமாக 5 கிராமங்களில் முதல்முறையாகப் பகரப்பட்டுள்ளது. 10 கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு நபர் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் நெருங்கி வந்துள்ளார். சிறுவர்கள் முகாமில் 40 சிறுவர்கள் உற்சாகமாகப் பங்குப்பெற்றுள்ளனர். இங்கு ஒருநாள் ஆத்தும ஆதாய முகாம் மற்றும் விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகை சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஊழியத்தை எதிர்க்கும் ரூமா பெகு இயேசுவின் அன்பால் தொடப்பட; சுனில் கும்பாகின் குடும்பம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; மொங்கலா பெகு தனது குடிப்பழக்கத்தைக் கைவிட; பாப்பாடோலே குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

சத்தீஸ்கட்

பையாதன் - 2:

தாங் சின் லியான் & உங் தியான்சிங்

துதிக்க: சுவிசேஷம் 2 கிராமங்களில் வசித்துக்கொண்டிருக்கும் 10 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. உபவாச ஜெபம் எவ்வித தடையுமின்றி நடந்து முடிந்துள்ளது. சுவிசேஷத்தின் மீது அநேகர் நாட்டம் காண்பித்துவருகின்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மின்சார விபத்தினால் தனது 2 கால்களும் எரிந்துப்போன நிலையிலிருக்கும் குஷ்மேகாவிற்கு பூரண சுகம் கிடைக்க; மின்சார அதிர்வின் பாதிப்பினால் சுயநினைவிழந்திருக்கும் அனில் அற்புத சுகமடைய; பூல்மானியா சோனாரின் குடும்பத்தில் மழலை செல்வம் தவழ: வரும்நாட்களில் நடக்கவிருக்கும் இயேசுத்திரைப்பட காட்சிகள், இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்கள் மற்றும் பின் தொடர்பணி ஊழியங்கள் தேவனால் நிரம்ப ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

முக்கியமானவரும், அதிமுக்கியமானவரும்!

டெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தள கல்யாண் புரியில் வசித்துவரும் ஒரு முக்கியப் பிரமுகர் குல்தீப் ஆவார். அவருடைய தந்தை காளிசரண் மனநிலை பாதிக்கப்பட்டதின் நிமித்தம் அவரால் குடும்பத்தினர் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். எனவே குல்தீப் தன் நண்பர்கள் மூலம், 'நமது சுதேச ஊழியர் பிரேம்சந்தை அழைத்து ஜெபித்தால், தேவன் சுகம் தருவார்' என அறிந்துகொண்டார். அதன்படி பிரேம்சந்தும் தொலைபேசி வாயிலாக ஜெபித்து, குல்தீப்பையும் விசுவாசத்தோடு ஜெபிக்க வழிகாட்டினார். ஜெபத்தின் பலனாக, அவரது தந்தை முற்றிலுமாக மனநோயிலிருந்து சுகம் ஆனார். ஆகவே, தற்போது அக்குடும்பத்தினர் இயேசுவை நம்ப ஆரம்பித்துள்ளனர். ஜீவனுள்ள அதிமுக்கிய உண்மை தேவனை மேலும் இக்குடும்பம் அறிந்துகொண்டு, தேவ மந்தையில் சேர்க்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செல்வி. எமி ஆனந்தி

ஒடிசா

ராய்ரங்பூர்:

சாமுவேல் J. & ஹவிலா பரமானந்த்

துதிக்க: சுவிசேஷத்தினால் 6 கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன; அதனால் 245 நபர்கள் புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர்; அவர்களில் 14 பேர்கள் கிறிஸ்துவை இரட்சகராக அறிக்கை செய்துள்ளனர். தனது நிலத்தைச் செப்பனிடும்போது ஏற்பட்ட திடீர் நெஞ்சுவலியினால் அவதிப்பட்ட மங்கல் சமாத் அற்புத சுக மடைந்துள்ளார். அனைத்து முயற்சிகளும் பலனற்றுப்போன நிலையில், சபையாரின் ஜெபத்தின் மூலம் மஞ்சள்காமாலை நோயிலிருந்து பிலோ நாயக் பூரண குணமடைந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: மூன்று சபை மக்களுக்கென ஆலயங்கள் கட்டிக்கொடுக்கத் திட்ட மிட்டிருக்கும் பணிகள் யாவும் அதற்குரிய அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப் பட்டபின் விரைவில் தொடங்கப்பட; பல்காசாகி கிராமத்தில் புதியதொரு ஆராதனைக்குழு துரிதமாகத் தொடங்கப்படவும், அதன் மூலம் அக்கிராம மக்கள் யாவரும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வரவும்; நமது ஆராதனைக்கு வந்து சரீர சுகம் பெறும் மக்கள் யாவரும் தொடர்ச்சியாக நமது ஆராதனைகளில் விருப்பத்துடன் பங்குப்பெற; வீட்டைவிட்டு வெளியேறி இருக்கும் ஜமுனா பெத்தானியின் கணவர் சுகநலத்துடன் வீடு திரும்பி, மீண்டும் தன் மனைவியுடன் சமாதானமாய் இணைந்து வாழ ஜெபிப்போம்.

குஜராத்

ஃபோக்டி - தலைமைத்துவப் பயிற்சி மையம்:

ரூபன் ரவி & விஜயராணி ரூபன்

துதிக்க: சஹயாத்ரி பிராந்தியத்தைச் சார்ந்த 17 மூத்த சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ஃபோக்டி நிலத்திற் கான வேலியமைக்கும் பணி நல்ல முறையில் நிறைவடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது விடுமுறைக்குப்பின் விடுதி வந்திருக்கும் நமது விடுதிப் பிள்ளைகள் மற்றும் புதிதாக விடுதியில் இணைந்திருக்கும் பிள்ளைகள் யாவரும் அவ்விடுதி சூழ்நிலைக்கேற்ப தங்களை அமைத்துக்கொள்ள; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் 3 பிராந்தியங்களைச் சார்ந்த சுதேச ஊழியர்களுக்கான மூன்றாம் பகுதி பயிற்சி நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக; தண்ணீர் பற்றாக்குறை தீர நல்ல மழையை தேவன் கட்டளையிட; சுதேச ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சிக்கான நமது இயக்கத் தின் கல்விக்கையேடுகள் புத்தக வடிவில் வெளிவர; நமது விடுதியில் சமையல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கென பணியமர்த்தப்பட்டிருக்கும் ரமேஷ்பாய் மற்றும் கோமதிபேன் ஆகியோர் தங்களது பணிகளை உண்மையுடன் செய்ய ஜெபிப்போம்.



நஸ்வாடி:

யுவனேஷ் & ஜான்சி ராணி

துதிக்க: புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 124 நபர்கள் சுவிசேஷத்தின்மீது அக்கறை காட்டி வருகின்றனர். 10 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 5 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் 7 இடங்களில் தங்குத்தடையின்றி நடைபெற்றுள்ளன. வலிப்பு நோயிலிருந்து ராகேஷ்பாய் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் உடனடியான சுகத்தைப் பெற்றுள்ளார். புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்விப்படிப்பிற்கான இடம் கமலேஷ்பாயிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டுங்ராபீல் இனமக்களின் சமுதாய வாழ்வு மேம்பட; இம்மக்கள் மத்தியில் நிலவும் இரத்தஅணு கோளாறு சம்பந்தமான சுகவீனங்கள் மறைய; கலடியா கிராம ஆலயக்கட்டுமானப்பணி எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்று முடிய; விவசாயத் தொழிலினிமித்தமாக அருகிலிருக்கும் பிற மாநிலங்களுக்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாய் இருக்கவும், அங்கே நற்சாட்சியான வாழ்வு வாழவும் ஜெபிப்போம்.

தராம்பூர் & கெர்காம்:

விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

துதிக்க: சுவிசேஷம் 6 கிராமங்களில் உரைக்கப்பட்டுள்ளது. 17 முழு வேதாகமப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. குந்தியா கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கெர்காம் பகுதியிலிருந்து 10 நபர்கள் தைரியமாக தங்களுக்கு கிறிஸ்துவின்மீது இருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். பக்கவாதத்திலிருந்து ஆதிபேன் சுகம் பெற்றுள்ளார். தண்டுவேல் கிராமத்தில் புதியதொரு ஜெபக்குழு ஆரம்பிக்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சார்தர்வேரா கிராம சுர்கார் நாக்குப்புற்றுநோயிலிருந்து சுகம் பெற; ஜூலிபேன் வயிற்றுக்கட்டியிலிருந்து குணமடைய; ரஷீலாபேன் மற்றும் ரீனாபேன் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து காப்பாற்றப்பட; கோபா, மாம்மா, பாச்சா, போபி மற்றும் சார்தர்வேரா ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் சுமூகமாக நடந்து முடிய ஜெபிப்போம்.

நடந்தது என்ன?

மகாராஷ்டிரா, சோப்டா பணித்தளம், தல்னேர் கிராம பிரசாந்த் கோலியை அவரது பக்கத்து வீட்டினர் இரும்புக்கம்பியால் தாக்கியதில், அவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, சுயநினைவற்றவரானார். இதைக் கண்ட அவரது வீட்டார் நம்பிக்கையற்று சத்தமிட்டு அழுதனர். முழுக்கிராம மக்களும் கூடி, அவரை துலேயிலுள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். போகும் வழியில் பிரசாந்தின் தாயும் சகோதரியும் கண்ணீருடன் அவருக்காக ஜெபித்தனர். நடந்தது என்ன? சிறிது நேரத்தில் பிரசாந்த் தனது நெஞ்சில் யாரோ ஓங்கி குத்தியதைப் போல் உணர்ந்து, தன் சுய நினைவிற்குத் திரும்பினார். மருத்துவர்களால் தங்கள் கண்களை நம்பவே முடியவில்லை. பின்பு இருவாரம் பிரசாந்த் அம்மருத்துவமனையில் தங்கி, தனது காயத்திற்கான சிகிட்சை பெற்று, வீடு திரும்பினார். ஆம், அடித்துத் தள்ளப்பட்டும் நாம் மடிந்து போகிறதில்லை! கர்த்தருக்கே துதி!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரமாமுனி J.B.V. பிரசாத்
திரு. வெங்கடேஷ் வடார்
திரு. ஆஷிஷ் குமார்
செல்வி. சுபாசினி முர்மு

பாவ்நகர்:

அகிலேஷ் குமார் & கிரண்தேவி

துதிக்க: இப்பணித்தளத்தில் புதிதாகப் பணியமர்த்தப்பட்டுள்ள நமது மிஷனெரியின் குடும்பம் தேவ நாம மகிமைக்கென்று நன்குப் பணி செய்து வருகின்றனர். கோவிட்-19னின் நிமித்தம் பல்வேறு இடங்களுக்குச் சிதறிச்சென்றிருக்கும் அனைத்து விசுவாசிகளையும் நமது மிஷனெரிகள் சந்தித்துள்ளனர். அலாங் திருச்சபை விசுவாசிகள் எவ்வித பிரச்சனைகளுமின்றி ஆலய ஆராதனைகளில் பங்குப்பெற தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது மிஷனெரிக்குடும்பம் தங்கியிருக்கும் வீட்டின் உரிமையாளர் அவ்வீட்டில் ஆராதனை நடத்த அனுமதிதர; காட்டியாவாடி மொழியைக் கற்றுக்கொள்ள தேவன் நமது மிஷனெரிகளுக்கு நல்ல மொழிஞானம் தர; வலது கண்ணில் திடீரென ஏதோ கோளாறு ஏற்பட்டு, தனது கண் பார்வையை இழந்திருக்கும் தினேஷ்பாயிற்கு மீண்டும் கண்பார்வை கிடைக்க; கோவிட் தொற்றுநோயினிமித்தம் பல இடங்களுக்கு சிதறிச்சென்றிருக்கும் நமது விசுவாசிகள் அனைவரையும் ஒன்றுகூட்ட தேவன் அநுக்கிரகம் பாராட்ட ஜெபிப்போம்.

மோட்டாபொண்டா:

சாமுவேல் சுப்பிரமணி & சுசிலா

துதிக்க: கிறிஸ்துவின் மந்தைக்குள் 12 பேர் புதிதாக தஞ்சம் புகுந்துள்ளனர். 2 முழு வேதாகமப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குட்லி கிராம ஆலயக்கட்டுமானப்பணி தொடங்கப் பட்டுள்ளது. வேதத்தின் அடிப்படையில் தந்த ஆலோசனையினால் குட்லி சபை அங்கத்தினர்களின் குடும்பங்களிலிருந்த குடும்பப்பிரச்சனைகள் அகன்றுப் போயுள்ளன. நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான பாக்கியங்கள் கிடைத்துள்ளன. வீட்டின் மேற்கூரையிலிருந்து தவறி விழுந்த ராகேஷ்பாய் எவ்வித சேதமுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளார். அதிக இரத்த அழுத்தக் கோளாறினால் வாய்ப்பேச முடியாமல் அவசர சிகிட்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த சுலோச்சனாபேன் அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளோர் அவரில் வேரூன்றி வளர; விடுதிகளில் தங்கிப்படிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; நமது விசுவாசிகளுக்கு விவசாயத் திற்கான நல்ல காலச்சூழ்நிலையும், நல்ல அறுவடையும் கிடைக்க; நீட் தேர்வை எழுதியிருக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக; இருதய பெலவீனத்திலிருக்கும் ரேகாபேன், எய்ட்ஸ் நோய்க் கிருமியினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஸ்வப்னா, சிறுநீர் நோய்த்தொற்றினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் துருபால் ஆகியோர் பூரண சுகமடைய ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

கடோத்: ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்

துதிக்க: முதல்முறையாக இயேசுவின் நற்செய்தி சுவிசேஷமாக 3 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். குடிப்பழக்கத்திலிருந்து ராகேஷ்பாய் விடுதலை பெற்றுள்ள தற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தின்மீது விருப்பம் காட்டும் ராஜுபாய் மற்றும் ராகேஷ்பாய் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; கடப்பார் கிராம சாந்துபாய் வாய்ப்புற்றுநோயிலிருந்து குணமடைய; சேட்டன்பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; இடையில் படிப்பை விட்ட பல்சோத் சிறுவர் பராமரிப்பு மையத்தைச் சார்ந்த பிள்ளைகள் தங்களது படிப்பை விடாமல் தொடர; விகான் கிராமத்தில் ஒரு ஆலயம் கட்ட தேவையான நிலம் வாங்கப்பட ஜெபிப்போம்.

தாத்ரா & நகர் ஹவேலி

கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

துதிக்க: இங்கு நடத்தப்பட்ட சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 350 பிள்ளைகள் பங்கேற்றதில், 25 பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து முதல்முறையாக அறிந்துள்ளனர். அநேக நாட்களாக சாப்பிட முடியாமல் வயிற்று வீக்கத்தினால் அவதிப்பட்டு வந்த லக்ஷ்மிபேன் ஜெபத்தினால் சுகம் பெற்றுள்ளார். வசோனா கிராம உஷா சரியாக தூங்க இயலாமல் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தபோது, அவருக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபம் கேட்கப்பட்டு, தற்போது அவர் தெளிந்த புத்தியுடன் சமாதானமாகத் தூங்கும் கிருபையைப் பெற்றுள்ளார். ஜம்னிபேனின் மகன் வீட்டைவிட்டு வெளியேறியதால் சமாதான மற்று காணப்பட்ட அக்குடும்பத்தில் ஜெபத்தின் வாயிலாக, தேவன் அம்ம கனைச் சமாதானத்துடன் திரும்பிவரச் செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: தனது 14 வயது மகளை இழக்கக்கொடுத்திருக்கும் ராஜ்சிபேன் தேவ ஆறுதல் பெற; பெண்ணிய பிரச்சனையிலிருந்து சுமன்பேனும், நிர்மலாபேனும், கர்ப்பப்பை பிரச்சனை யிலிருந்து சங்கீதாபேனும், சிறுநீரகக் கோளாறிலிருந்து ஜசோதாவும், நய்னாவும், நீட்டாவும் நன்கு சுகம டைய; தர்ஷன் & பார்வதிபேன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

அஞ்சாத நெஞ்சம் வேண்டும்!

மேற்கு வங்காளம், சம்சி பணித்தள வாரி கிராம விசுவாசிகள், தங்களது கிராமத்தலைவர் மற்றும் பிற கிறிஸ்தவ வகுப்பினரால் கடும் எதிர்ப்புக்குள்ளானதோடு, சக கிராம மக்களிடம் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டனர். இவ்வாறு அநேகர் கிறிஸ்துவிடம் திரும்புவதற்கு சுதேச ஊழியரே காரணம் என்றெண்ணி, அவரது குடும்பத்தைக் கிராமத்தை விட்டே விரட்டியடிக்க கிராமத்தினர் முடிவெடுத்தனர். மற்றும் சபை மூப்பரின் பன்றிகளைத் திருடிச் சென்று சாப்பிட்டனர். இப்படி தினமும் பலவித பிரச்சனைகளை உருவாக்கினர். ஆயினும், நமது சபை மூப்பரும் பிற விசுவாசிகளும், "கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலிருந்து எதுவும் எங்களைப் பின்னடையச் செய்ய முடியாது!" என உறுதியாகக் கூறிவிட்டனர். அவ்விசுவாசிகளின் அஞ்சாத நெஞ்சமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்திற்காக தேவனைத் துதிப்போம்!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. எஸ்தர் ஆபிரகாம்

மகாராஷ்டிரா

ஜவஹர்:

ஸ்ரீனிவாச ராவ் & ராஜ்யலட்சுமி

துதிக்க: புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளார். புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 2 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 2 முழு வேதாகமப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2 இடங்களில் விசுவாசிகளின் இரவுநேர ஜெபக்கூடுகைகள் மற்றும் இரவுநேர வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூடுகைகள் யாதொரு இடையூறுமின்றி சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது சபைகளிலுள்ள வாலிபர்கள் சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் முன்வந்து உதவ; புதிய பணித்தளமான பாய்சரில் நமது ஊழியங்கள் ஊக்கமாக நடைபெற; ரிட்டு மற்றும் சுரேகாவின் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் மூப்பர்கள், வாலிபர்கள் மற்றும் பெண்கள் பயிற்சி நிகழ்ச்சிகள் யாவும் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம்.

முக்காடா: M. சங்கர் & ஆனந்தி

துதிக்க: சுவிசேஷம் 4 கிராமங்களில் முதல்முறையாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. 5 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 5 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்கள் மத்தியில் பகிரப்பட்டுள்ளன. சாவர்பாடா மற்றும் பாவர்பாடா கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. நமது ஆத்தும ஆதாயக்கூடுகையின்போது, தீய ஆவியின் பிடியினால் அவதிப்பட்டு வந்த அனிதாபேன் சுகமடைந்துள்ளார். ஜெபத்தின் பலனாக சுகவீனத்தினிமித்தம் மரணத்தருவாயில் இருந்த கங்குபேன் பூரண சுகம் பெற்றுள்ளார். தவறான சிகிட்சையினால் சரீரத்தில் உண்டான கட்டிகளினால் கஷ்டப்பட்டு வந்த அன்குஷ், தேவ கிருபையால் குணமாகியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது இளம் விசுவாசிகள் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாக இணைந்து கொள்ள; பொம்பிரிபாடா கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; தவறாய் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து பாவுபாய் விடுதலையடைய; பில்லி சூனிய கட்டுகளிலிருந்து திலீப்பாயின் குடும்பம் விடுவிக்கப்பட; கோலி சமுதாயத்திலிருந்து நமது சத்சங் கூடுகைகளில் வந்து கலந்து கொள்ளும் புதிய குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

ஆலப்பள்ளி – ஆஷீர்வாத் விடுதி:

நிங்தௌஜம் அலோன்சிங் & லியான்பியக்நெமி

துதிக்க: நமது விடுதியைச் சார்ந்த 10-ம் வகுப்பு மாணவர்கள் யாவரும் தங்களது அரசாங்க பொதுத் தேர்வில் நற்தேர்ச்சிப் பெற்றுள்ளனர். மத்தியப் பிரதேசத்திலுள்ள காண்ட்வா பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற விடுதிப்பொறுப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியில் நமது மிஷனெரிகள் யாவரும் கலந்து கொள்ள தேவன் நல்கியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்புதிய கல்வியாண்டில் நமது பிள்ளைகள் யாவரும் தங்களது கல்வியை நன்கு கற்க; நமது பிள்ளைகள் யாவரும் அனைத்துவித நோய்களுக்கும் விலக்கிக் காக்கப்பட; உயர்கல்விக்கு முயற்சி செய்யும் நமது பிள்ளைகள் அனைவருக்கும் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளில் இடம் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சிந்து கோரா எட்வின்

எட்டப்பள்ளி: வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு

துதிக்க: புதிதாக 13 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். 30 முழு வேதாகமப் புத்தகங்கள் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. 2 நாட்கள் உபவாச ஜெபம் மற்றும் முழுஇரவு நேர ஜெபம் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. நமது சுதேச ஊழியரொருவர் இரு சக்கர வாகனத்திலிருந்து தவறி விழுந்தபோதிலும், எச்சேதமுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளார். கரஞ்சி கிராம பண்டு ஹிச்சாமி இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டபின், பல்வேறு பெலவீனங்களிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மடியா மொழியை நமது ஊழியர் விரைவில் கற்றுக்கொள்ள; இன்னும் அதிகமதிகமான மக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து இணைய; நமது விசுவாசிகள் யாவரும் ஆவிக்குரிய வாழ்வில் செழித்தோங்க; தற்போதைய மழைக்கால சூழ்நிலைகளின் தட்பவெட்ப நிலைக்கேடுகளுக்கு நமது விசுவாசிகள் யாவரும் விலக்கிக் காக்கப்பட; நமது விசுவாசிகளின் விவசாயத்தொழிலில் நல்ல அறுவடைகளை தேவன் தர ஜெபிப்போம்.

ஜிம்மலாகட்டா: ஸ்ரீனிவாசா & சுனிதா

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளதில், 12 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 33 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 3 முழு வேதாகமப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 53 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 45 இடங்களில் நமது விசுவாசிகள் சிறிய குழுக்களாகக்கூடி கிரமமாக ஜெபித்து வருகின்றனர். 46 இடங்களில் வேதாகம வகுப்புக்குழுக்களின் மூலம் நமது விசுவாசிகள் வேத வசனத்தை நன்கு கற்று வருகின்றனர். 6 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நல்ல முறையில் நடந்தேறியுள்ளன. மாந்திரீக பில்லி சூனிய கட்டுகளின் பாதிப்பிலிருந்து சுமித்ரா விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கோண்ட்ஸ், மடியா கோண்ட்ஸ், மன்யா கோயா மற்றும் நிதகானி கோமட்டிஸ் இனமக்கள் கூட்டங் கூட்டமாக கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; திலீப், சந்தோஷ், எஷ்வந்த், வெங்கட் ஆகியோரின் குடும்பங்களில் ஆசீர்வாதமான மழலை செல்வங்கள் தவழ; சம்மக்கா காசநோயிலிருந்தும், நந்திகோன் கிராம பிரகன்யா மனவளர்ச்சியின்மையிலிருந்தும், வெங்கட்டின் தாயார் சிறுநீரகக் கோளாறிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.



சோப்டா & சாங்வி:

கோபி கிருஷ்ணன் & மேனகா

துதிக்க: புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 4 நபர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவின் பெயரில் அறிக்கை செய்துள்ளனர். 20 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 3 முழு வேதாகமப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. லக்ஷ்மன் மற்றும் கலவந்தி ஆகியோர் சுவிசேஷப்பணியில் தன்னார்வமாக உதவி செய்து வருகின்றனர். 5 கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது. அதிக கால இடைவெளிக்குப்பின் பெண்கள் கூடுகை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. 10 நபர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கலங்கி கிராம ஆதர், காலு, தினேஷ் ஆகியோரின் குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் கலங்கி, கத்காவ், நஞ்சியாபாடா, சஜ்யாபாடா, பங்கேதா மற்றும் மகாதேவ் ஆகிய கிராமங்களில் ஆராதனைக்குழு மற்றும் சிறுவர் வகுப்புகள் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கும் திட்டங்கள் யாவும் செயல் வடிவம் பெற; கத்காவில் நடக்கவிருக்கும் பஜன் நிகழ்ச்சி, பத்சாரியில் நடக்கவிருக்கும் இரவுநேர ஜெபக்கூடுகைகள், அமோலாவில் நடைபெறவிருக்கும் விசுவாசிகள் பயிற்சிக்கூடுகை, கன்யாபாடாவில் நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகை மற்றும் சாங்வியில் நடக்கப்போகும் வாலிபர் கூடுகை யாவும் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருக்க ஜெபிப்போம்.

கர்நாடகா

கஜேந்திரகடா:

மஞ்ஜ்யா நாயக் & ரத்னா

துதிக்க: தேவ கிருபையால் 3 கிராமங்களில் சுவிசேஷப்பணி சிறப்பாக நடந்துள்ளது. 3 பேர் கிறிஸ்துவின் கல்வாரி அன்பிற்குள் வந்துள்ளனர். 20 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 5 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. 20 இடங்களில் பின்தொடர்பணி ஊழியங்கள் நடந்தேறியுள்ளன. 12 இடங்களில் உபவாச ஜெபங்களும், 12 இடங்களில் இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களும் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. எல்பர்கா மற்றும் ஜீ.கடா பகுதிகளில் ஆத்தும ஆதாய முகாம்கள் நடைபெற்றுள்ளன. 6 இடங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் விசுவாசிகள் சிறப்பாக தேவ வார்த்தைகளில் வளர்ந்தோங்குமாறு நடத்தப்பட்டுள்ளன. மண்ணம்மா ஜெபத்தின் மூலமாக நெஞ்சுவலியிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடக்கவிருக்கும் கூட்டங்களின் ஆசீர்வாதங்களுக்காக; கௌரம்மா மற்றும் இறையா குழந்தை பாக்கியங்கள் பெற; திடீரென தனது பார்வையை இழந்திருக்கும் 6 வயது சிறுவன் ரோகித் மீண்டும் கண்பார்வை பெற; கெச்சப்பா ஹரிஜன் பக்கவாதத்திலிருந்தும், மகாதேவி கர்ப்பப்பையில் இருக்கும் புண்களிலிருந்தும் அறுவை சிகிட்சையின்றி சுகம் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. எட்வர்ட் ஜெபசிங் J.

திருமதி. வசாவே சுனிதா வெச்யா

ஆந்திரப் பிரதேசம்

ரோதம்: தேபதத்தா லிமா & சோனியா ராணி

துதிக்க: புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 11 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் விநியோகிக் கப்பட்டுள்ளன. 5 கிராமங்களில் 3 வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதின் விளைவாக, 8 புதிய தொடர்பாளர்கள் நமக்குக் கிடைத் துள்ளனர். அமாவாசை நாளன்று ஒரு முழுஇரவு ஜெபமும், இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சியும் நடத்தப்பட்டுள்ளன. நர்சம்மா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். கர்ப்பப்பையில் உண்டான கட்டியினால் அவதிப்பட்டு வந்த ஜெயசுதா ஜெபத்திற்குப்பின் சற்றுத்தேறி வருகிறார். இருசக்கர வாகன விபத்தி லிருந்து நமது மிஷனெரியின் குடும்பத்தை தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: ரோதம், திருக்கலப்பட்டணம் மற்றும் சானிபள்ளி ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்ட தேவையான நிலங்களை அம்மக்களே நன்கொடைகளாகத் தர; திருக்கலப்பட்டணம் கிராமத்தில் ஞாயிறுதோறும் ஆராதிப்பதற்கு நல்ல தொரு வாடகை அறை கிடைக்க; பாரதி யின் குடும்பம் இரட்சிக்கப்பட; வெங்கட கிருஷ்ணப்பா குடும்பத்தினர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; சற்றுத்தேறிவரும் ஜெயசுதா தனது கர்ப்பப்பைக் கட்டிப்பிரச்சனையிலிருந்தும், அனில் தனது இருதயக்கோளாறிலிருந்தும் முழுசுகம் பெற ஜெபிப்போம்.

அடம்பிடித்த ஆவி அடங்கியது!

மத்தியப் பிரதேசம், நேப்பா நகர் பணித் தளத்திலுள்ள துகய்தாட் கிராமத்தைச் சேர்ந்தவர், கிரிஜாபாய் ராம்கிஷோர். இவர் கடந்த 12 ஆண்டுகளாய் பிசாசின் பிடியில் இருந்தார். அந்த அசுத்த ஆவி இவரை மட்டுமல்லாமல் இவரது முழுக்குடும்பத்தையும் வாட்டி வதைத்தது. 2 வருடங்களுக்கு முன்பு இவர்களின் 9 வயது மகன் ஒரு நீரணையின் அருகில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அந்த அசுத்த ஆவி அம்மகனைத் தண்ணீரில் தள்ளி கொன்றுவிட்டது. அந்த அசுத்த ஆவி கிரிஜா மூலமாய் "இந்த முழுக்குடும்பத்தையும் அழித்து விட்டபின்புதான் இவள் உடலிலிருந்து போவேன்" என்று அடம்பிடித்ததோடு, அவர் களின் மகனைக் கொன்றதும் தான்தான் என்பதையும் ஒப்புக்கொண்டது. எனவே, அந்த முழுக்குடும்பமும் நிலைக்குலைந்து பயத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களது உறவினர்கள் இயேசுவைக்குறித்து இக்குடும்பத்தாருக்கு அறிவித்தனர். ஜூன் 12-ம் தேதி கிரிஜாவை துகய்தாட் சபைக்கு ஜெபத்திற்காய் அழைத்து வந்தனர். அனைத்து விசுவாசிகளும் இவருக்காக ஊக்கமாய் ஜெபித்தனர். அந்த சமயமே, கிரிஜா அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். இன்று அக்குடும்பம் விடுதலையோடு தேவனை ஆராதிக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவுக்குள் இன்னும் வளர நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.



குப்பம்: பால் குப்புசுவாமி & சைலா

துதிக்க: கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை 7 நபர்கள் அறிக்கையிட்டுள்ளனர். நமது அனைத்து 10 சபைகளிலும் எவ்வித தடங்கலுமின்றி ஆலய ஆராதனைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. 6 இடங்களில் வீட்டு ஜெபக்கூட்டங்களும், வேன் மூலமாக 8 கிராமங்களில் பெரியளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியங்களும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 15 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்களும், ஒரு கிராமத்தில் இயேசுத்திரைப்பட ஊழியமும் நடந்தேறியுள்ளன. 8 இடங்களில் சிறுவர் விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழியம் ஏறத்தாழ 400 பிள்ளைகள் தேவாசீர்வாதம் பெறும் படியாக சிறப்புடன் நடந்து முடிந்துள்ளன. நமது விசுவாசிகளில் ஒருவர் ஒரு மிஷனெரியைத் தாங்குவதற்கென தன்னார்வமாக முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடக்க இருக்கும் பயிற்சிக்கூடுகைகள் மற்றும் பிற ஆவிக்குரிய கூடுகைகள் யாவற்றிலும் தேவாசீர்வாதம் தங்கியிருக்க; கைப்பிரதி ஊழியமும், இயேசுத்திரைப்பட ஊழியமும் தடைசெய்யப்பட்டுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; நமது விசுவாசிகளான சிவன்னா, லலிதா, சின்னக்கா, அசோக், ராகினி, ஆறுமுகம், கவிதா, நவநீதம்மா, மாசிலாமணி ஆகியோர் நமது ஆராதனைகளில் தவறாமல் பங்குப்பெற; கீழே விழுந்ததின் நிமித்தமாக தனது இடுப்பெலும்பில் ஏற்பட்ட காயத்திலிருந்து விசாலாட்சி சுகம் பெற; கடன் பிரச்சனைகளிலிருந்து வெங்கடாச்சலம் விடுபட்டு, சமாதானமான வாழ்வு வாழ; முதுகுத்தண்டுவடப் பிரச்சனையிலிருந்து சாந்தி பிரியா பூரண குணமடைய ஜெபிப்போம்.

தமிழ்நாடு

தமிழ்நாடு மண்டல அலுவலகம்:

ஆல்பின் & விஜயராணி

துதிக்க: தர்மபூரி, திருவண்ணாமலை மற்றும் தேன்கனிகோட்டை ஆகியப் பிராந்தியங்களில் சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. சபை மூப்பர்களுக்கான பயிற்சிக்கூடுகை சிறந்த முறையில் நடத்தப்பட்டு, அதில் பங்குப்பெற்றோரில் அநேகர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். பாம்புக்கடியினால் ஏற்படவிருந்த உயிர் சேதத்திலிருந்து ஜெயக்கொடி காப்பாற்றப்பட்டுள்ளார். தீய ஆவியின் பிடியிலிருந்து பூரணி விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: எதிர்ப்பினிமித்தமாக பின்மாற்றமடைந்துள்ள மல்லமுத்து, ஆபில் மற்றும் இந்திராணி ஆகியோர் மீண்டும் தங்களது விசுவாச வாழ்விற்குள் வர; நவீன், ஆன்சர், கிருஷ்ணன், ஜெயராமன், வள்ளி, முருகன், மூர்த்தி, கேனான் மற்றும் சாந்தா தைரியமாக தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; மாதுவின் குடும்பம் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; தைராய்டு பிரச்சனையில் இருந்து சம்பூரணம் பூரண குணமடைய; கலாவி பகுதியில் ஆலயம் கட்ட தகுந்தோர் நிலம் வாங்கப்பட ஜெபிப்போம்.



இளம்பிள்ளை: வில்சன் & ஜெயா

துதிக்க: தாடிகாரனூர் மற்றும் இளம் பிள்ளை சபைகளில் சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. இப்பகுதி யிலுள்ள 10-ம் & 12-ம் வகுப்பு அரசாங்க பொதுத்தேர்வுகள் எழுதிய விசுவாசிகளின் பிள்ளைகள் யாவரும் நல்ல தேர்ச்சியடைந்துள்ளனர். வேதாக மத்தைச் சுக்குநூறாக கிழித்தெறிந்த சதீஷ் குமார், தற்போது நமது ஞாயிறு ஆராதனைகளில் வந்து கலந்து கொள் கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மண்ணீரல் மாற்று அறுவை சிகிட்சை செய்திருக்கும் செல்வின் மற்றும் அவரது மனைவி வின்சிலா பூரண சுக மடைய; நீலாவதி பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; வாய்ப்பேச முடியாமலிருக்கும் லக்ஷ்மிக்கு தேவன் பேசும்திறனைக் கட்டளையிட; கவிதா, நிர்மலா, பிரியா ஆகியோருக்கு குழந்தை செல்வங்கள் பிறக்க; பாம்புக்கடியினால் ஒருமாதக்காலமாக மருத்துவமனையில் இருந்து சிகிட்சை பெற்றுவரும் லக்ஷ்மி அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

திருவள்ளூர்:

பால் ஆனந்தன் & சாரா ஜோதி

துதிக்க: காக்காகண்டிகை கிராம வாலிபர்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை யாய் இருப்பதோடு, ஜெபக்கூடுகைகளிலும் கலந்து கொள்கிறார்கள். நமது விசுவாசி அஜித்திற்கு கோரமண்டல் சிமெண்ட் கம்பெனியில் நல்லதொரு வேலை கிடைத்துள்ளது. நமது ஜெபக்கூடுகையில் பங்குப்பெற்ற ரேவதியின் கணவர் சின்னு, தேவ வார்த்தையைக் கேட்பதிலும் தீவிரவாஞ்சை காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வேணுகோபாலபுரத்தில் வைத்து நடைபெற்ற நமது ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கவிதாவின் தாயார் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற; காயத்ரி மற்றும் வந்தனாவின் பாட்டி குடிப்பழக்கத் திலிருந்து மீள; சந்திரம்மாவின் தினசரி தேவைகளனைத்தும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

முதல் மிஷனெரி!

டெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தள நமது ஊழியருடைய பக்கத்து வீட்டுக்காரரின் மகள், கிருஷ்ணவேணி. 6 வருடங்களுக்கு முன் FMPB ஊழிய டெல்லி ஜெபக் குழுத்தலைவர்கள் மூலமாக இவர் தன் குடும்பத்தில் முதலாவது தேவனை ஏற்றுக்கொண்டார். பலவிதமான பிரச்சனை களிலிருந்து இவர் விடுவிக்கப்பட்டு, இறுதி யில் முழுகுடும்பமும் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். பின்பு இவர் இவரது பழைய வாழ்வைப்போல அழிந்துப்போகும் வாழ்வை வாழும் ஆத்து மாக்களுக்கு ஊழியம் செய்ய தேவ அழைப்பு பெற்றார். எனவே, மிஷனெரிப்பணிக்காக FMPB-ல் விண்ணப்பித்து, கடந்த 2022 ஜூன் 13 & 14-ம் தேதிகளில் நடந்த நேர்காணலில் தெரிந்தெடுக்கப்பட்டு, FMPB-ல் சேர்ந்துள்ளார். திரிலோக்புரி சபையாரும் மகிழ்வோடு இவரைத் தங்கள் முதல் மிஷனெரியாக அனுப்பி, இவருக்காக ஜெபிக்க உறுதிபூண்டுள்ளனர். தேவனுக்கே மகிமை!



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கிறிஸ்டோபர் P.G., திரு. பாலாஜி ஏசுதாஸன் G.
திரு. ரஞ்ஜன் காசலா

கெலமங்கலம்:

பாலசுப்ரமணியன் &
பரஞ்ஜோதி லூசினா

துதிக்க: கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் புதிதாக 4 பேர் அறிக்கையிட்டுள்ளனர். 4 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 2 முழு வேதாகமப் புத்தகங்களும் மக்கள் மத்தியில் தரப்பட்டுள்ளன. மேலும் 3 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகி வருகின்றனர். நமது நவஜீவன் சேவா மண்டல் விடுதிகளில் 6 பிள்ளைகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். பிள்ளை குறுக்குநிலையில் கிடந்ததால், சுகப் பிரசவத்திற்கு வாய்ப்பில்லை என மருத்துவர்கள் கூறியபோதிலும், பிரேமா விற்கு தேவன் சுகப்பிரசவத்தை நல்கி உள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: கேசாத்ரி, ஜெயலக்ஷ்மி, கிருஷ்ணம்மா தைராய்டு பிரச்சனை யிலிருந்தும், ராஜன், சிவா, முனிராஜ், பாண்டியன் வலிப்பு நோயிலிருந்தும், எஸ்தர் தாங்கமுடியாத தலைவலியில் இருந்தும் முழுமையான சுகமடைய; வாய்ப்பேச முடியாமல் இருக்கும் வெங்கடசாமி நன்குப் பேசும்திறனைப் பெற்றிட; லோகேஷ், பிரகாஷ் மற்றும் ஜோஷ்வாவின் குடும்பங்களில் தேவ சமாதானம் காணப்பட ஜெபிப்போம்.

பழைய பாவத்தாசை வருகுதோ!

மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித் தளம். பெர்காபட்டி கிராமத்தில் வசித்து வரும் சுனிதா மாதவி, மடியா கோண்ட் இனத்தைச் சார்ந்தவர். இவரும் இவருடைய குடும்பத்தாரும் இயேசுவை விசுவாசிப்பவர்கள். ஆனால், இவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்முன் குடிப்பழக்கத்தில் ஈடுபட்டிருந்தார். இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு, முழுக்குடும்பமும் மது அருந்துதல், புகையிலை போன்ற பழக்கங்களை விட்டு மனந்திரும்பினர். இச்சமயம் திடீரென ஒருநாள், மாதவியின் தோழி இவரைக் கட்டாயப்படுத்தி குடிக்க வைத்துள்ளார். இதையறிந்த இவருடைய குடும்பத்தினர் கண்டித்தனர். அதனால் மனமுடைந்த இவர் விஷம் அருந்தி மயங்கினார். பெற்றோர் ஜிம்ம லாகட்டா மருத்துவமனைக்கு இவரைக் கொண்டுச் சென்றனர். இவருடைய சகோதரர் நமது ஊழியருக்குத் தகவல் கொடுத்தார். ஊழியரின் உதவியால் ஒரு கிறிஸ்தவ மருத்துவர் மாதவிக்கு முதலுதவியளித்து, பின்பு அஹெரி தாலுகாவிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். ஆனால், அக்குடும்பத்தினர் மாதவிக் காக ஜெபிக்குமாறு ஊழியரைக் கேட்டனர். பின்னர் அவருடன் இணைந்து அவர்களும் அன்றிரவு முழுவதும் ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன், மாதவியை முழுவதுமாக குணமாக்கினார். தேவனுக்கே மகிமை!

378 மிஷனெரி ஆல்பம்

மணிப்பூர், சுராசாந்த்பூரில் வாழும் கிறிஸ்தவ பெற்றோரான திரு & திருமதி. கய்கோதாங் தம்பதியருக்கு 6-வது பிள்ளையாக 12.10.1979-ல் சகோ. G. சோன்பு சிங்சன் பிறந்தார். இவர் மிகுந்த ஆர்வத்துடன் சபை ஊழியங்களில் ஈடுபட்டு வந்த தன்னுடைய 10-ம் வகுப்புப் பருவத்தில் இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டார். 1 யோவான் 3:1-ம் வசனத்தின் மூலமாக தேவன் இவரோடு இடைப்பட்டதின் மூலம், இயேசுகிறிஸ்துவின் பெரிதான அன்பு இன்னதென்பதை உணர்ந்தார்.

தன்னுடைய இறுதியாண்டு இளங்கலை பட்டப்படிப்பை ஷில்லாங்கில் படிக்கும்போது, இவரோடு படிக்கும் சக மாணவர்கள் தங்களுடைய எதிர்காலத்தைக் குறித்து விவாதித்தனர். அப்போது வேதாகம கல்லூரியில் இணைந்து படிக்கும் ஒரு வாஞ்சை இவருக்குள்ளாக இருந்ததால், தன் சொந்த ஊரான மணிப்பூரிலே Evangelical College of Theology என்ற வேதாகம கல்லூரியில் சேர்ந்து M.Div., படிப்பைப் பயின்றார். அக்கல்லூரிப் படிப்பின் இறுதிநாளில் இவருக்கு யோவான் 20:21-ல் இருந்து ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. அதில் "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்ற வசனம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்நாளில்தானே இவருடைய தகப்பனாரும், "நீ இந்தியாவின் பிற பகுதிகளுக்குச் சென்று, தேவனுக்கு ஊழியம் செய்!" என்று கூறினார்.

பின்பு இவர் நமது ஊழியர் சகோ. ஹெலன் சிங்சிட் உடன் முன்னேற்றப்பணியில் உதவி செய்ய நியமிக்கப்பட்டார். பின் 2006-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நேர்முக காணலில் கலந்து கொண்டு, தெரிவு செய்யப்பட்டு, நாக்பூருக்கு ஊழிய அறிமுகப்பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். அதன்பின் பணித்தள அனுபவப் பயிற்சியை ஹரியானாவில் நமது ஜீப்குழு ஊழியர்களுடன் இணைந்து செய்ய அனுப்பப்பட்டார். பின்பு சென்னையில் 2-ம் முறை நடந்த நேர்காணலில் கலந்து கொண்டபின், மறுபடியும் பணித்தள அனுபவப் பயிற்சிக்காக சுவிசேஷ ரத ஊழியத்தின் மூலம் தரங்கம்பாடி, பெரியமலை, கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி போன்ற இடங்களுக்குச் சென்று, அதன்பின் ஜான்சியில் மிஷனெரிப்பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்.

ஜீப்குழு ஊழியம் மூலம் இவர் சில காலங்கள் பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் போன்ற இடங்களில் ஊழியம் செய்தபின், ஜம்முவிலுள்ள நௌஷேரா பணித்தளத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்; பின்பு திருச்சபையில் முக்கியப்பங்கு வகித்துவந்த அருட்திரு. தாங்சுங்நுங் சிங்சன் என்பவருக்கு 01.03.1981-ல் 4-வது பிள்ளையாகப் பிறந்த சகோதரி. டிங்நய் நேங் என்பவரை 27.05.2009-ல் தனக்கு மனைவியாகக் கொண்டார். அச்சகோதரி தனது திருமணத்திற்கு முன் ஒரு வாலிபர் முகாமில் கலந்து கொண்டபொழுது, இயேசுகிறிஸ்து தனக்காகச் சிலுவையில் பலியாகி, உயிர்த்தெழுந்தார் என்பதையுணர்ந்து, தேவ ஊழியத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய தன்னை அர்ப்பணித்தார். அவர் தனது M.Div., படிப்பை முடித்தபின், பீகாரில் 3 ஆண்டுகள் வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 2008-ல் இணைந்தார்.

ஏப்ரல் 2010-ம் ஆண்டு வரை ஜம்மு காஷ்மீரில் உள்ள பௌனி பணித்தளத்தில் ஊழியம் செய்ய அமர்த்தப்பட்டனர். 2015-ம் ஆண்டு வரை ஜார்க்கண்டிலுள்ள சாஹிப்கஞ்ச், டோனிபிச்சைகனி, யெகோவா நிசி போன்ற பணித்தளங்களில் ஊழியத்தை நிறைவேற்றினார்கள். நவம்பர் 2019-ம் ஆண்டு வரை பந்தேனியில் உள்ள ஆசீர்வாத சிறுமியர் விடுதியில் பணியமர்த்தப்பட்டனர். தற்போது இவர்கள் கொட்டா மாவட்டத்தில் உள்ள பொடுவாவில் இருக்கும் 'யெகோவா யீரே' சிறுவர் விடுதியில் ஊழியம் செய்து வருகின்றனர்.

இவர்களது குடும்ப வாழ்வில் நெம்வங்நெய் (D.O.B. 22.03.2021) என்ற பெண் குழந்தையை தேவன் தந்து ஆசீர்வதித்துள்ளார். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபங்களில் நினைவுகூருவோம்.



திரு. G. சோன்பு சிங்சன் & திருமதி. டிங்நய் நேங் சிங்சன் குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

தேசிய உபவாச ஜெபம்



2022 ஆகஸ்ட் 12,13,14-ம் தேதிகளில்

பணித்தள மையங்கள், பிராந்திய முன்னேற்றப்பணி மையங்கள் மற்றும் இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் வைத்து நடைபெறும் வருடாந்திர உபவாச ஜெபத்தில் உபவாசத்துடன் பங்கேற்று, ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம். தேசத்தின் க்ஷேமத்திற்காய், திருச்சபைகளின் எழுப்புதலுக்காய், தேவ சமூகத்தில், தேவபிள்ளைகளாய் திறப்பிலே நின்று ஜெபிக்க வாருங்கள்.

குறிப்பு:

அந்நாட்களில் ஜெபம் நடைபெறும் இடங்களை அறிய உங்கள் பகுதி விரிவுப்பணி ஊழியர்களை, மற்றும் பொறுப்பாளர்களைத் தொடர்புக் கொள்ளுங்கள்.

Published by: S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***